# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 19 புதன்கிழமை (03-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:38


# நிபந்தனையுடன் யுத்தநிறுத்தம்; அரச உயர்மட்டத்தில் ஆராய்வு!

## இந்திய உதவி பெறுவது குறித்தும் பரிசீலனை

கொழும்பு,ஜனவரி3

**விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்துக்குப் பதிலாக நிபந்தனையுடன் கூடிய யுத்தநிறுத்தத்தை அமுல் செய்வது குறித்து அரசு ஆராய்ந்துவருகிறது.**

**இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு சிரேஷ்ட அமைச்சர்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.**

ஜனாதிபதி மாளிகையில் நேற்றிரவு நடைபெற்ற கலந்துரையாடலில் சிரேஷ்ட அமைச்சர்களான பட்டிவீரக்கோன், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அலவி மௌலானா, இந்திக குணவர்த்தன, எஸ்.பி.திஸநாயக்க ஆகியோர் பங்குபற்றினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் 'இணையத் தளம்' புலிகளால் ஸ்தம்பிதமா?

### கொழும்பில் அடிபட்ட ஊகங்கள்

கொழும்பு,ஜன.3

இலங்கை இராணுவத்தால் நேற்றுமுன்தினம் - புத்தாண்டு தினதன்று - ஆரம்பிக்கப்பட்ட புதிய இணையத்தளம் (**Web Site**) ஆரம்பித்த நாளன்றே புலிகளின் 'சைபர்' தாக்குதலுக்கு இலக்காகிச் செயலிழக்கச் செய்யப்பட்டிருக்கலாம் என்ற ஊகங்கள் கொழும்பில் வெளியாகி இருந்தன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரை இந்த இணையத் தளத்துடன் தொடர்புகொண்டு தகவல் எதனையும் பெறமுடியாத நிலை இருநததை அடுத்தே புலிகளின் 'சைபர்' தாக்குதல் தொடர்பான ஊகங்கள் வெளியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது புதிய வெப் தளத்துக்கு சரமாரியான மின் அஞ்சல்களை தொடர்ந்து அனுப்பி அதனைச் செயற்பட முடியாதவாறு தடுக்கும் முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருக்கலாம் என்று இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே பொருள் எடுத்துவரும் 'இந்துருவலி' கப்பலின் கட்டணம் குறைப்பு!

கொழும்பு,ஜன.3

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வர்த்தகர்களின் பொருள்களை ஏற்றிச் செல்லும் சேவையில் ஈடுபட்டுள்ள 'இந்துருவலி' கப்பலுக்கான கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இக்கப்பலில் ஏற்றப்படும் ஒரு மெற்றிக் தொன் பொருள்களுக்கான கட்டணம் 46 டொலர்களில் இருந்து 36 டொலர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

'இந்துருவலி' கப்பலின் நிறுவனமான 'வெலிபல் லங்கா' நிறுவனத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் நிலையத்தில் குண்டுவீச்சு! கைதி மரணம்!!

அவிசாவளை பொலீஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் தடுப்புக்காவலில் இருந்த கைதி ஒருவர் கொல்லப்பட்டார். பொலீஸார் இருவர் காயமடைந்தனர்.

பொலீஸ் நிலையத்துக்குள் பிரவேசித்த ஒருவர் தடுப்புக்காவல கூண்டுக்குள் குண்டு ஒன்றை வீசியதில் கைதி கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட நபர் பல கொள்ளைசம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் அவரிடம் இருந்து இந்தச் சம்பவங்கள் தொடர்பான விவரங்கள் பொலீஸாருக்குக் கிடைப்பதைத் தடுக்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-3)

### மிருசுவில் படுகொலைச் சம்பவம்

## எண்மரின் மரணத்துக்கும் படையினரே காரணம்!

### மரண விசாரணையில் நீதிவான் தீர்ப்பு

மிருசுவிலில் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டவர்களது மரணங்கள் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டக்கூடிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அடி, சித்திரவதை மற்றும் வெட்டுக் காயங்களால் ஏற்பட்டவை என்ற தீர்மானத்துக்கு வரவேண்டி உள்ளது.

இச் சம்பவம் தொடர்பாகக் கடந்த ஆறு தினங்களாக நடைபெற்ற மரண விசாரணையின் முடிவில சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ.பிரேம்சங்கர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளதாவது:-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இளம்பெண்ணின் புதைகுழி குறித்து விசாரிக்க உத்தரவு!

வடமராட்சி,ஜன.3

மிருசுவில் வடக்குப் பகுதியில் இளம்பெண் ஒருவர் புதைக்கப்பட்ட புதைகுழி காணப்படுவதாக ஜெயசுதா தெய்வகுலசிங்கம் என்பவர் வெளியிட்டிருக்கும் தகவல் தொடர்பாக மேற்கொண்டு விசாரணைகளை நடத்துமாறு சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் யாழ்.சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

விசாரணை தொடர்பான தகவல்களை நீதிமன்றத்துக்குத் தெரிவிக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

மிருசுவில் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவரான தெய்வகுலசிங்கம் என்பவர் அப் பகுதியில் புதைகுழி ஒன்றில் இளம்பெண் ஒருவரின் சடலம் புதையுண்டு கிடப்பதைக் கண்டதாக தன்னிடம் கூறியிருந்தார் என்று அவரது மனைவியான ஜெயசுதா மரண விசாரணையின் போது தெரிவித்திருந்தார். (ஐ-31-117-173)

## 'லங்கா முடித்த' 3 தடவைகள் பயணிகள் சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம்,ஜன.3

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவந்துள்ள 'லங்கா முடித்த' கப்பலில் இருந்து பொருள் இறக்கும் பணி காங்கேசன்துறையில் நடைபெற்று வருகின்றது.

பொருள்கள் இறக்கி முடிந்ததும் இவ்வார இறுதிமுதல் மூன்று தடவைகள் இக் கப்பல் காங்கேசன் துறைக்கும் - திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் சேவையை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலின் முதலாவது சேவையில் பயணம் செய்ய இருப்பவர்களுக்கான பதிவுகள் வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை யாழ்.அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றன. (ஐ-3)


பன்னிரு இராசியினருக்கும் புத்தாண்டுப் பலன் உள்ளே


## பால்மா, சவர்க்காரம் போன்றவற்றை இனி கொழும்பு விலைக்கே பெறலாம்

### பொருள்களை அனுப்பும் வணிகர் கழகம் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.3

★ வடக்கே பொருள்களை ஏற்றிவரும் சரக்குக் கப்பல்களுக்கான கட்டணம் குறைக்கப்பட்டிருப்பதால் குழந்தைகளுக்கான பால்மா வகைகள், சவர்க்காரம் மற்றும் பற்பசை போன்ற பொருள்களை கொழும்பு விலைக்கே யாழ்ப்பாணத்தில் கொள்வனவுசெய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

★ அத்துடன் ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் மூன்று ரூபாவால் குறைக்கப்படும்.

யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை கப்பலில் ஏற்றும் வணிகர் கழகத்தின் தலைவர் எம்.குணரத்தினம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை கொள்முதல் செய்து கொழும்புக்குக் கொண்டுவர நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் அரச அதிபரின் ஏக உரிமை அதிகாரமும் ஏனைய கட்டுப்பாடுகளும் எம்மால் இதைச் செய்ய முடியாமல் தடுக்கின்றன என்றும் அவர் கூறினார்.

தெரிந்தோ தெரியாமலோ தனியார் கப்பல் கம்பனி ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஏகபோகஉரிமையே இன்று யாழ். மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

கப்பல் போக்குவரத்துத் துறையில் போட்டியை ஏற்படுத்தி தேவையற்ற கட்டுப்பாடுகளை நீக்கினால் யாழ்.மக்களுக்கு எல்லாப் பொருள்களையும் நியாய விலையில் விற்க நாம் தயாராக இருக்கின்றோம் - என்றும் அவர் கூறினார். (ஐ-3)

### தனங்களப்பில் கண்ணிகள் மீட்பு

கொழும்பு,ஜன.3

தென்மராட்சியில் 'கினிகிர' நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டுள்ள தனங்களப்புப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை மீட்கும் பணிகளில் படையினரின் பொறியியல் பிரிவு ஈடுபட்டிருப்பதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

தனங்களப்புப் பகுதியிலிருந்து மூன்று டாங்கி எதிர்ப்பு கண்ணிகள், பத்து நிலக்கண்ணிகள், 163 மிதிவெடிகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலை மற்றும் தனங்களப்புப் பகுதிகளில் மிதிவெடிகளில் சிக்கி இரு படையினர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மானிப்பாய்ப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டிருப்பதாக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ-3-6)

### சு.க.மாநாட்டில் ஜனாதிபதி பங்குபற்றவில்லை

கொழும்பு,ஜன.3

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடைபெற்றது. எனினும் அந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்தம் மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக எதுவும் பேசப்படவில்லை எனத் தெரிய வந்தது.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொள்ளவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக மாநாட்டில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### நோர்வே தூதர் வெள்ளியன்று வருகிறார்

கொழும்பு,ஜன.3

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹேய்ம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வரவுள்ளார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள தேக்க நிலை தொடர்பாகவும் - தாம் தயாரித்துள்ள புதிய யோசனைகள் குறித்தும் - ஜனாதிபதியுடனும், எதிர்க்கட்சித் தலைவருடனும் அவர் கலந்துரையாடுவார்.

### இன்று அடையாள அணிவகுப்பு

வடமராட்சி,ஜன.3

மிருசுவில்படுகொலைச சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு இன்று பருத்தித்துறையில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள ஓர் அதிகாரி உட்பட 7 படையினர் இன்று அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

இந்தப் புதைகுழிச் சம்பவத்தின் முக்கிய சாட்சியான பொன்னுததுரை மகேஸ்வரன் நேற்று இராணுவப் பொலீஸாரால் படுகொலைகள் இடம்பெற்றதாகக் கூறப்படும் மிருசுவில் தெற்குப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அத்துடன் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளை இராணுவப் பொலீஸார் வீடியோ படம் எடுத்தனர். (ஐ-31-117-173)

### வவுனியாவில் விபத்து

வவுனியா,ஜன.3

வவுனியா - ஹொரவப்பொத்தான வீதியில் றோயல் தியேட்டருக்கு முன்பாக நேற்றுக்காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் வேலணை மேற்கைச் சேர்ந்த கணகசபாபதிப்பிள்ளை பிரகலாதன் என்ற குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். (ஐ-3)

## புத்தாண்டு தினத்தில் ஆண்குழந்தைகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் 12 குழந்தைகள் யாழ்.ஆஸ் பத்திரியில் பிறந்தன.

புத்தாண்டு நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் பிற்பகல் வரை பிறந்துள்ள இந்தக் குழந்தைகள் அத்தனையும் ஆண்கள் என்று தெரிவிக் கப்படுகிறது.

கடந்த வருடம் மூன்று குழந்தைகளில் இருவர் ஆண்கள் என்ற வீதத்தில் குழந்தைகள் பிறந்துள்ளன என்றும் -

இந்த வருடத்தில் முதல் நாளே ஆண்குழந்தைகளின் பிறப்பு அதிகரித்துள்ளது என்றும் - ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.(இ-3-139)

## கான்ஸ்டபிள் காயம்

வவுனியா,ஜன.3

மாமடுப் பொலீஸ் நிலையத்தில் இரு பொலிஸ் பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது.

இந்தச் சம்பவத்தில் **ஜயன் பெரேரா** என்ற கான்ஸ்டபிள் காயம் அடைந்தார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த சந்திரகுமார என்பவர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார். எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(இ-3-164)


**BRIGHTMAN**

*கல்வி நிலையம்*
(நீராவியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக)
*பிறவுண் வீதி - யாழ்நகர்.*

**A/L 2002**

**பௌதிகம்**
*ஒளியியல* **(LIGHT)**

**BY:- ஜெயசீலன்**

ஆரம்பம்:-
05.01.2001 வெ -2.30 (82467)


## பாதிக்கப்பட்ட எழுதுநர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.3

மாகாண எழுதுநர் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள் நியமனத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளத்தில் உள்ள டி.எம்.ஐ.கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களையும் இந்த கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு எழுதுநர் நியமனத்தில் பாதிக்கப்பட்டோர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-6)

## சோலை வரி

சங்கானை,ஜன.3

வலி. மேற்குப் பிரதேச சபையின் சங்கானை உப அலுவலகத் திற்குட்பட்ட குடியிருப்பாளருக்கு சோலைவரி அறிவித்தல் சம்பந்தமான படிவம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

2001ஆம் ஆண்டுக்கான சோலை வரி, மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டு, இப்படிவத்தில் அத்தொகை குறிக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுகளில் வரி நிலுவை இல்லாதோர், 2001-01-31 ஆம் திகதிக்குள் இந்த வருடத்துக்குரிய சோலை வரியைக் கட்டினால், குறிப்பிட்டவீதம் வரிச் சலுகையும் அளிக்கப்படவுள்ளது. (இ-29)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்** 27 - 02 - 1951



**மறைவு** 05 - 12 - 2000

## அமரர் வேதவனம் தபோதநாயகம்

**(சங்கீத ஆசிரியர், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)**

மாதம் ஒன்று மறைந்தது நீங்கவில்லை எம் துயரம்
பாசத்தின் உறைவிடமே எங்களை வழிநடத்திய
அன்புத் தெய்வமே!
உங்கள் உறவுகள் உள்ளம் கலங்கி நிற்கின்றன அப்பா!
என்றென்றும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

5.12.2000 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும், வட இலங்கை சங்கீத சபையினருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிசெய்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (03.01.2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (82479) **- குடும்பத்தினர்.**


மகளிருக்கான
*பயிற்சி வகுப்புக்கள்*

☆ உடையமைத்தல்
☆ துணியில் வர்ணமிடல்
(இலவசம்)
☆ கேக் ஐசிங், பூவேலை
☆ முடியலங்காரம்

ஆரம்பமாகியுள்ளன.

**புதிய பிரிவுக்கு**
ஜனவரி 16 வரை
அனுமதிகள் வழங்கப்படும்

**தூரிகை**
*செங்குந்தா வீதி,*
*கல்வியங்காடு.*
வடமராட்சியில்.
**தூரிகை**
***M.M.V.** றோட்*
*நெல்லியடி.*
(82473)



சித்தன்கேணியில் ஒரு பிரபல்யமான கல்வி நிறுவனத்தில் நீங்கள் கற்பதில் பெருமை கொள்வீர்கள்!

**BARATHY**

**சித்தன்கேணி**

தரம் 5 தொடக்கம் 11 வரை இதுவரை அனுமதி பெறாத மாணவர்களுக்கு **புதிய பிரிவு ஆரம்பம்: 06.01.2001**

**எமது சிறப்புமிக்க ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள்**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | - திரு. தேவா |
| | - திரு. பாலச்சந்திரன் |
| கணிதம் | - திரு. எஸ். சிவரூபன் |
| | - திரு. சிவா |
| தமிழ் | - திரு. சின்னத்தம்பி |
| | - திரு. தவரட்ணம் |
| சமூகக்கல்வி | - திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | - திரு. விஜயபாஸ்கர் |
| | - திரு. அருமைநாயகம் |
| | - திரு. வாகீசர் |
| வர்த்தகம் | - திரு. லோகேஸ்வரன் |
| சமயம் | - திரு. N.T. தரன் |
| தமிழ் இலக்கியம் | - திரு. சின்னத்தம்பி |

**அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்**

**குறிப்பு:** இந்த ஆசிரியர்கள் சித்தன்கேணியில் வேறு கல்வி நிறுவனங்களில் கற்பிக்கமாட்டார்கள். (82477)



**இன்றைய எமது ஒறிஜினல் - புதிய வெளியீடு -**

**அருண்குமார், மீனா நடித்த**

**அன்புடன்**

**அருண் வீடியோ மூவி**
நெல்லியடி
(82463)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருளானந்தம் சந்திரபூமலர்

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளானந்தம் சந்திரபூமலர் நேற்று (02-01-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அருளானந்தம் (ஓய்வு பெற்ற துறைமுக இலிகிதர்-கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் தேவசுகந்தி, மரியவசந்தி (பிரதேச செயலகம்-தெல்லிப்பழை),ஆன்நிலாந்தி (உடுவில் மகளிர் கல்லூரி - 2000 A/L) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரை மற்றும் மகிழ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயரட்ணம், பரமேஸ்வரி, சின்னையா, நித்தியானந்தன் ஆகியோரின் மைத்துனியும், ஜெயமோகன் (ஆசிரியர்), ஜெயபாஸ்கரன் (எழுதுநர் - வவுனியா), காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் சிற்சபேசன், கௌரி, பாஸ்கர சபேசன், கூலரி (ஆசிரியர்) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03-01-2001) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித செபமாலை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இராமலிங்கம் வீதி,*
*உடுவில்.* **கணவர், பிள்ளைகள்.** (82461)


**லஷ்சுமி சினிமா**
இவைவில்

**அஜித், (இரு வேடங்கள்) சிம்ரன் நடித்த**

**வாலி**

(றீல்ஸ்) காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.)
(C14613)



**நாகம்ஸ்**
சுன்னாகம்

**டைட்டானிக்**
(தமிழ் - பிலிம்)

✪ டைட்டானிக் என்ற கப்பலுக்கு நடந்த பயங்கரம்.
✪ இது ஒரு உண்மைச் சம்பவம். இது ஒரு உண்மையான காதல் சம்பவம்.
✪ உலகில் உள்ள எந்தச் சக்திகளாலும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது.
(82485)

காட்சி நேரங்களில் மாற்றம்
புதிய நேரம்: 10.30, பி.ப. 2.30.


# ஸ்கந்தாவின் இதய அஞ்சலி



எமது கல்லூரியின் அரு மைந்தன்

## இ.கதிர்காமநாதன்

(கௌரவ செயலாளர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்பு)

அவர்களின் திடீர் மறைவினால் எமது கல்லூரிச் சமூகம் மிகுந்த வேதனையடைகிறது. கல்லூரி விருத்திக்கு எந்நாளும் துணை செய்த அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்கந்தவரோதயக் கல்லூரி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (82489)

***அதிபர்,***
***ஆசிரியர் கழகம்.***


**ராஜா** யாழ்ப்பாணம்

**விஜய், மோனிக்கா, ரம்பா,மணிவண்ணன்**
மற்றும் பலரின்
வித்தியாசமான நடிப்பில்

**மின்சாரக்கண்ணா**

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)
(C/14587)


## திருமதி பொன்னையா அன்னபூரணம்

(பூரணம்)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி பொன்னையா அன்னபூரணம் நேற்று (02.01.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பொன்னையாவின் அன்பு மனைவியும் வல்லிபுரநாதன், காசிநாதன் (**S.P.H.I.**- கோப்பாய்), சிவலோகநாதன் (பண்டா, அஞ்சல் அலுவலகம் - உரும்பிராய்), காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் அருணாகாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் தனலட்சுமி, கமலேஸ்வரி, செல்வராணி, திரவியராசா (ப.நோ.கூ. சங்கம் - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்ற சிவக்கொழுந்துவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2001) புதன் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (82481) **பொ.காசிநாதன்** (மகன்)

# உதயன்

## இன்றைய முடிவு...?

தற்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரச தரப்பும் போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்த வேண்டும். சமாதானத்தை அன்றிப் போரை விரும்பவில்லை என்பதனை ஏற்கனவே பலதடவைகள் மக்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். சமாதானச் சூழல் ஒன்றை ஏற்படுத்த அரசு விரும்புமானால் அது போர் நிறுத்தம் செய்தே ஆகவேண்டும்.

இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன்.

விடுதலைப்புலிகள் தற்போது மேற்கொண்டுள்ள போர் நிறுத்தம் மக்களுக்கு நிம்மதியைத் தந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி அரசாங்கமும் போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இப்படிச் சொல்லியுள்ளார் மாதம்பேகம அசாஜி தேரர்.

ஆனால் அரசாங்கத் தரப்பிலிருந்து போர் நிறுத்தம் செய்வதில்லை; நிபந்தனை இன்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மட்டுமே தயார் என்ற கருத்து நிலைப்பாடே அனேகரிடமிருந்து வெளிப்படுகிறது. மிகச் சிலரே, விடுதலைப் புலிகள் போன்று அரசும் போர் நிறுத்தம் செய்த பின்னர் பேச்சு நடத்த வேண்டும் என்ற கருத்துடையவர்கள்.

போர்—இனப்பிரச்சினை தொடர்பாகப் போரை அன்றிச் சமாதானத்தையே மக்கள் விரும்புகிறார்கள். நடந்து முடிந்த ஐந்து தேர்தல்கள் மூலம் சமாதானத்தைக் காணவே மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்றெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னர் கூறிவந்தார்.

அவர் நாட்டில் இல்லாத வேளையில், விடுதலைப் புலிகள் தமது ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை அறிவித்து, அதனைக் கைக்கொண்டும் வருகிறார்கள். அவர் சார்பில் பேசுபவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு உண்டு. ஜனாதிபதியின் புத்தாண்டுச் செய்தியோ மேற்படி இரண்டு சாராரையும் திருப்திப்படுத்தும் வகையில் சொல்லிடப்பட்டுள்ளது.

இத்தகைய குழப்பமான, முரண்பட்ட நிலைகளுக்கு இடையில் அமைச்சரவை இன்று கூடி, அரசு எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று ஆராய்ந்து தீர்மானிக்கவுள்ளது.

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு ஒரு தந்திரம் என்றும், அவர்களை நம்ப முடியாது என்றும் அரசின் சார்பில் பேசவல்லவர்களில் பலர்—அமைச்சர்கள் கதிர்காமர், அனுருத்த உட்பட—கூறியிருக்கிறார்கள்.

ஆனால் சர்வதேச உலகம் விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகவே வரவேற்றுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயாரான நிலையில் உள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. அவ்வாறிருக்க அவர்களை நம்புவது எவ்வாறு என்றும் கேட்கிறது! அரசுக்கு உள்ளார்ந்தரமாகச் சமாதானப் பேச்சில் நம்பிக்கை இல்லை என்பதனையே இந் நிலைப்பாடு தொட்டுக் காட்டுகிறது.

அரசாங்கம் போர் விரும்பிகளையும், பேரினவாதிகளையும் சமாளிக்க முனைகிறதா, அல்லது உண்மையான சமாதானப் பேச்சை விரும்புகிறதா என்பது இன்றைய அமைச்சரவை முடிவிலிருந்து தெரிய வந்து விடும்! அதாவது சாயம் வெளுக்குமா இல்லையா என்பது இன்று அம்பலமாகிவிடும்.

# மருந்துகளின் விலை, தரம் என்பன யாழ். குடாநாட்டில் பரிசோதிப்பு

## சுகாதாரத் திணைக்களம் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3

மருந்துபொருள்களின்விலை மற்றும் தரத்தினைப் பரிசோதிக்கும நடவடிக்கைகள் சுகாதார திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல்அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

தரமற்ற மருந்துகளை விற்பனை செய்வோர் மீதும் மருந்து பொருள்களை அதிகரித்த விலையில் விற்பனை செய்யும் மருந்து விற்பனை நிலையங்கள் மீதும் சுகாதார திணைக்களத்தினால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாவனையாளர்கள் மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது அதற்குரிய பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறும்—

அதிகாரித்தவிலையில் மருந்துப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை சுகாதார திணைக்களத்துக்கு வழங்கி உதவுமாறும்—கோரப்பட்டுள்ளது—

கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணத்தில் மருந்து பொருள்களின் விலை கொழும்பு விலையை விட மூன்று மடங்காக அதிகரித்து விற்கப்படுவது தெரிந்ததே.

இது தொடர்பாக திருகோணமலையிலுள்ள மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-5-15)

## சிறுவர் பாடசாலை இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜன. 3

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் சிறுவர் பாடசாலை மீண்டும் வழமையான இடத்தில் இயங்கத்தொடங்கி உள்ளது. (ஐ-3)

## பாடசாலை புதிய இடத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 3

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை நேற்று முதல் சட்டநாதர் சிவன் கோயிலடியிலுள்ள நடராஜா ஆங்கிலக் கல்வி நிலையத்தில் இயங்கி வருவதாக வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த வித்தியாசாலை மாணவர்களைப் புதிய இடத்தில் இயங்கும் பாடசாலைக்கு வருமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

## மிருசுவில் சம்பவத்தை கண்டித்து பிரதேச சபை தீர்மானம்

தென்மராட்சி, ஜன. 3

மிருசுவிலில் அப்பாவிப் பொது மக்கள் எட்டுப்பேர் படுகொலைசெய்யப்பட்டதை கண்டித்து பருத்தித்துறைபிரதேச சபையினால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அப்பாவிப் பொது மக்கள் படையினரால் கொல்லப்படுவது கண்டிக்கப்பட வேண்டியதுடன் குற்றவாளிகள் எவராக இருப்பினும் நீதியின்முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் அத்துடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் வழமையான நிவாரணங்கள் நட்டஈடுடன் விசேட நிவாரணங்களும் வழங்கப்பட வேண்டும் என பிரதேச சபை உபதலைவர் ப. இரவிந்திரன் கொண்டு வந்த பிரேரணை நிறைவேறியது.

ஈ.பி.ஆர்.எல்.எல். உறுப்பினர் இரா. சிவச்செல்வம் பிரேரணையை வழிமொழிந்தார்.

பிரதேச சபைத் தலைவர் ஐ. ரங்கேஸ்வரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (இ-117)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 7லட்சம் ரூபாவில்அபிவிருத்திப் பணி

### கெயர் இந்த ஆண்டு செயற்படுத்தும்

யாழ்ப்பாணம், ஜன. 3

கெயர் நிறுவனத்தின் நிதி உதவியுடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 7 லட்சம் ரூபாவுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் இவ் வாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

குடி தண்ணீர் பிரச்சினையுடைய கிராமங்களில் 5 பொதுக் கிணறுகள் அமைக்கவென 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு 10 மலசல கூடங்கள் - புதிதாக அமைத்துக் கொடுக்கவென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில 2 குளங்களை புனரமைக்கவென 3 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 8 மலசல கூடங்களை புனரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும்—

இதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டதும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும்—

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6-5)

## 56 மீனவர் குடும்பங்களுக்கு 1,500 ரூபா நிவாரண உதவி

யாழ்ப்பாணம், ஜன. 3

அண்மையில் இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசித்து வந்த 56 மீனவ குடும்பங்களுக்கான ஆயிரத்து 500 ரூபா மீனவ நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பணம் யாழ். பலகலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் ஊடாக வழங்கப்பட்டன.

இவர்களில் இதுவரை 5 குடும்பங்கள் தமது நிவாரண பணத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்று நல்லூர் பிரதேச செயலர் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆரோக்கியம் அடைக்கலறாஜன், அன்ரன் விக்ரர் பொனிபஸ், சந்தியா டொமினிக், வல்லிபுர சிறீகனேசா, நாகநாதர் கணபதிப்பிள்ளை ஆகியோரே இதுவரை தமக்குரிய பணத்தைப் பெறாதவர்களாவர்.

இவர்கள் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுடன் தொடர்பு கொண்டு தமக்குரிய மீனவ நிவாரண பணத்தை பெறுறுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5-6)

## விளையாட்டுக் கழகங்களை பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3

விளையாட்டு அமைச்சின் கீழ் இதுவரைக்கும் பதிவு செய்யப்படாத யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி வேண்டு கோள் விடுத்துள்ளார்.

தமது பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் விளையாட்டு உத்தியோகத்தரிடம் பதிவு விவரங்களைச் சமர்ப்பித்து தமது விளையாட்டுக் கழகத்தின் பதிவுகளை உறுதி செய்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ம-5)

## பாடசாலை இயங்கும்

தென்மராட்சி, ஜன. 3

பல வருடங்களாக இயங்காமலிருந்த கரவெட்டி மேற்கு நாவலர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இன்று முதல் இயங்கவுள்ளது.

அண்மையில்வலய அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் இப் பாடசாலைக்கு வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார். [ஐ-117]

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 3

கடந்த 31 ஆம் திகதி அகாலமரணமடைந்த யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் பொன்னையா கமலரூபனுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் இன்று புதன்கிழமை கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் துணைவேந்தர், தமிழ்துறைத்தலைவர், கலைப்பீடாதிபதி, பேராசிரியர்கள், விரிவுரையாளர், மாணவர்கள் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவர். (ஐ-3)

### நாளை

மார்கழி 20

வியாழக்கிழமை

திதி: நவமி

முற்பகல் 11-56 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

முன்னிரவு 9. 35 வரை.

சுபநேரம்: 8-01 — 9-31

ராகுகாலம் 2-01 — 3-31

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நிர்வாணமாக இருப்போர் மத்தியில் சட்டை போட்டிருப்பவனே முட்டாள்.

- யாரோ

## ஆங்கிலப் பாடநெறிக்கான பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்ப்பாணம் கல்விக் கல்லூரியில் ஆங்கிலப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தேர்ச்சிப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது

இந்தப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:

பி. பிரிந்தா - நீர்வேலி, எஸ். கவிதா - வண்ணார்பண்ணை, எஸ் கலைவாணி - இளவாலை வடக்கு. ரி. மஞ்சுளா—கோப்பாய் வடக்கு வி, நாமகன் - புலோலி தெற்கு, ஏ. றொஜினி - சங்கத்தானை.

எஸ். சுதாஜினி - அராலி வடக்கு, வி. சாந்தினி - தட்டாதெருளம் வீதி, கொடிகாமம், எஸ். சிறிவித்யா - ஒடைலேன், வண்ணார் பண்ணை, ஜே. சி. தாமரை - கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை, எஸ். திருவேணி - நெட்டிலிப்பாய், கோண்டாவில்.

எஸ். திவ்யா - கலட்டி அம்மன் வீதி, வண்ணார் பண்ணை, எஸ். எமிலியா துஸ்பின்னை - சூரியகட்டைக்காடு, நானாட்டான், ரி. கே. குமரன் - அல்வாய் கிழக்கு, எஸ். ரஞ்சித்குமார் - கோண்டாவில் கிழக்கு, எம். ஜசிந்தா - பாஷையூர், பி. வி. ஜோசப் - 113 கோயில்வீதி, யாழ்ப்பாணம், பி. போல்- அந்தியபுர யாழ்ப்பாணம், எம். எல் நிசாந்தி-உரும்பிராய் தெற்கு, கே. செல்வி - சப்பல் ஒழுங்கை, யாழ்ப்பாணம், துஷந்தினி - வளாக ஒழுங்கை, திருநெல்வேலி, எம். பிரபாகரன் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (ஐ 3)

## சாரணிய சேவைக்கு ஆள் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

சிரேஷ்ட சாரணியர்களாக இணைய விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

16 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

'இலக்கம் 6, மூனாமனை வீதி, என்னும் சாரணிய மாவட்ட ஆணையாளரின் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பிரதேச செயலக மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம் ஜன. 3

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இம்மாத நடுப்பகுதியிலிருந்து நடைபெறவுள்ளன.

இடம் பெயர்ந்துள்ள பிரதேசசெயலர் பிரிவுகளுக்கான விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விளையாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்கள் மட்டுமே இந்தப் போட்டிகளில் பங்குபற்ற முடியும் என்று மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். (ம-5)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 3

கடந்த மாதம் 31ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(157914ஏ),
(157914பி), (169035ஏ),
(169035பி), (169035சி),
(169035டி), (170215ஏ),
(170215பி), (170215சி),
(170215டி), (173009ஏ),
(173714ஏ), (174714பி),
(174972ஏ). (174972பி),
(174972சி), (174972டி),
(175068ஏ), (75068பி),
(175068சி), (17568டி),
(175177ஏ), (175210ஏ),
[175210பி). (175210சி),
[175210டி]. [175847ஏ],
[175847பி], [175849ஏ].
[175849பி], [176585ஏ],
[176621ஏ]. [177013ஏ].

**சாவகச்சேரி**

(167578ஏ]. [167578பி],
[167578சி], [167578டி].
[174076ஏ], [177045ஏ],
[177045பி], [177045சி],

**யாழ்ப்பாணம்**

[170917ஏ]. [171271ஏ],
[171617ஏ]

**கரவெட்டி**

[171581].

**கோப்பாய்**

(157427ஏ), (162602ஏ),
(162602பி), (162602சி),
(162603ஏ),
(162603பி), (162603சி),
(163729ஏ), (163729பி),
(163729சி), (163729டி),
(163729ஈ), (163846ஏ),
(163846பி), (166938ஏ),
(166938பி), (168197ஏ),
(168197பி), (168198ஏ),
(168198பி), (168427ஏ),
(170483ஏ), (170483பி),
(170546ஏ), (170546பி),
(170546சி), (170546டி),
(170571ஏ), (170571பி),
(170575ஏ), (170576ஏ),
(170576பி). (170576சி),
(171276ஏ), (173204ஏ),
(173255ஏ), (173406ஏ)'
(173406பி), (173406சி)'
(174113ஏ). (174113பி)'
(174113சி), (174113டி),
(177018ஏ), (177018பி),
(177019ஏ), (177019பி),
(177019சி), (177019டி),
(177024ஏ), (177024பி),
(177024சி), (177039ஏ),
(177039பி), (177073ஏ),
(177086ஏ), (177094ஏ),
(177094பி), (177095ஏ),
(177095பி), (177316ஏ).
[177319ஏ], [177319பி],
[150809ஏ], [150809பி],
[150809சி], [168213ஏ],
[168213பி], [168213சி],
[168213டி], [168250ஏ],
[168250பி]. [168250சி],
[168250டி], [168341ஏ],
[168341பி], [168314சி],
[168357ஏ], [168357பி],
[168390ஏ], [168390பி],
[168403ஏ], [168403பி],
[168405ஏ], [168434ஏ],
[168437ஏ]. [168437பி],
[172668ஏ], [172699ஏ],
[172700ஏ], [173213ஏ],
[173240ஏ], [173240பி],
[173271ஏ], [173272ஏ],
[173280ஏ], [173323ஏ],
[173323பி], [173325ஏ],
[173325பி], [173325சி],
[173325டி], [173325ஈ],
[173326ஏ], [173326பி],
[173329ஏ], [173329பி],
[173329சி], [173385ஏ],
[173385பி],

**நல்லூர்**

[145729ஏ], [156894ஏ],
[156985ஏ], [156995ஏ],
[157160ஏ], [167694ஏ],
[170668ஏ], [170672ஏ],
[170703ஏ], [170799ஏ],
[170946ஏ], [170948ஏ],
[171262ஏ], [171266ஏ],
[171269ஏ], [171525ஏ],
[171566ஏ], [171582ஏ],
[171634ஏ], [174075ஏ],
[177016ஏ], [177016பி],
[177023ஏ], [177034ஏ],
[177059ஏ], [177059பி],
[177059சி], [177059டி],
[177068ஏ], [177068பி]
[175983ஏ], [175983பி]
[176519ஏ], [176519பி],
[176519சி], [176519டி],
[176573ஏ], [176709ஏ),
[176734ஏ], [176734பி]

**சண்டிலிப்பாய்**

[170669ஏ] [157927ஏ],
[157927பி], [157927சி],
[157927டி] [164343ஏ],
[164343பி], [164343சி],
[164343டி], [164343ஈ],
[164344ஏ], [164344பி],
[164344சி], [165450ஏ],
[165450பி], [165450சி],
[165450டி], [165718ஏ],
[165718பி], [169320ஏ],
[169337ஏ], [170219ஏ],
[172954ஏ].
(173045ஏ), (173045பி),
(174802ஏ), (174872பி),
(174841ஏ), (17?341பி),
(174951ஏ), (174951பி),
(174973ஏ), (174973பி),
(174973சி), (174973டி),
(174973ஈ), (174979ஏ),
(174979பி)' (174979சி),
(174980ஏ), (174980பி),
(174980சி), (175151ஏ),
(175770ஏ), (175771ஏ),
(175826ஏ), (175826பி),
(175827ஏ), (175853ஏ),
(175853பி).
(175890ஏ), (175890பி),
(175898ஏ), (175923ஏ),
(175967ஏ), (175967பி),
(175967சி), (175967டி),
(176532ஏ), (176588ஏ),
(176588பி), (176609ஏ),
(176609பி), (176609சி),
(176622ஏ), (176622பி),
(176690ஏ), (176695ஏ),
(176758ஏ), (176911ஏ),
(176911பி).

**தெல்லிப்பழை**

(169340ஏ), (173997ஏ),
(175799ஏ), (175799பி),
(175800ஏ), (175800பி),
(175800சி) (175800டி),
(175875ஏ), (176631ஏ),
(176631பி), (176674ஏ),
(176674ஏ),

**உடுவில்**

(167592ஏ), (167592பி),
(167615ஏ), (173937ஏ),
(173937பி), (174081ஏ),
(174081பி), (177015ஏ),
(177015பி), (177015சி),
(177021ஏ), (177030ஏ),
(177030பி), (177036ஏ),
(177042ஏ), (177044பி),
(177048ஏ),
(177051ஏ), (177055ஏ),
(177056ஏ), (177056பி),
(177056சி), (177065ஏ),
(177091ஏ), (177091பி),
(177091சி), (177204ஏ),
(166574ஏ), (170357ஏ),
(170357பி), (174755ஏ),
(174755பி), (174786ஏ),
(174786பி), (174788சி),
(174928ஏ), (175719ஏ),
(175763ஏ), (175763பி),
(175763சி), (175763டி),
(175763ஈ), [illegible],
(176534ஏ), [illegible],
(176557பி), (176557சி),
(176572ஏ), (176676ஏ),
(176676பி), (176705ஏ)
(176814ஏ)

(ம-10)


## தொலைபேசி தேவை

ரெலிகொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர் உரிமை மாற்றம் செய்து கொடுக்க விரும்பின் உடன் தொடர்பு கொள்க.

விளம்பர இல. 1170,
பே/பா உதயன்.

(82452)



இன்று ஓய்வு பெறும்
கிராம சேவை உத்தியோகத்தர்

## திரு. சண்முகம் சிவகுமாரன்

அவர்களை

## பாராட்டிப் போற்றுகின்றோம்

எல்லோர்க்கும் நல்லதையே செய்ய வேண்டும்
எல்லோரும் நல்லவராய் வாழ வேண்டும்
எவ்விடத்தும் நல்லதையே காண வேண்டும்
இல்லையென்று சொல்லாமல் உதவ வேண்டும்
என்பதையே இலட்சியமாய்க் கொண்ட செம்மல்
எங்களூர் பிரான்பற்றின் உயர்வுக்காக
எண்ணிலாச் சேவை செய்த இனிய பண்பாளன்
மாதர்கள் சங்கத்தின் மேம்பாட்டுக்காய்
மகத்தான பணி செய்த மனித நேயன்
ஓய்வு பெற்று உயர்ந்த நலம் எ..லாம் பெற்று
உவந்து மனம் மகிழ்ந்தென்றும் வாழ்கவென்று
பெரியவளவு முருகன் பேர் அருளை வேண்டிப்
பெருமை பெறப் பாராட்டிப் போற்றுகின்றோம்.

மாதர் சங்கத்தினர்
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

(சி-14608)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் த. முகுந்தனின்
(சமூகவியல் சிறப்புக்கலை)
அன்புத் தந்தையார்

### நா. தவச்செல்வம்

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- இறுதி வருட மாணவர்கள்

கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(82469)


ஜி. சி. ஈ சாதாரண தரம்

# விடைத்தாள்கள் திருத்தும் பணி வேம்படியில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 3

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜி சி ஈ சாதாரணதர பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி நாளை வியாழக்கிழமை தொடக்கம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பணிக்கென நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை நாளை காலை 8. 30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட்டுள்ளார்.

விடைத்தாள்கள் இன்றே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன. இதனால் இன்று நடைபெறவிருந்த திருத்தும் பணி நாளையே ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-10)

# பிரதேசசபைக்கு உழவு இயந்திரம்

வேலணை, ஜன. 3

வேலணை பிரதேச சபையினால் பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரம் ஒன்றுகொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நயினாதீவுப் பகுதிக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கே இந்த உழவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், தண்ணீர்த் தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டவுடன் உடனடியாக குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நயினாதீவுப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக பிரதேச சபைத் தலைவர், வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி, வடக்கு — கிழக்கு தமிழ்மொழி அலுவல்கள் மற்றும் இந்துசமய கலாசார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

இதனை அடுத்தே வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து சுமார் 16 இலட்சம் ரூபா நீர்வழங்கல் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-167)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த இடப்பெயர்வின் போது புலோப்பளை கிழக்கு, கிளாலி, ஆகிய எமது பகுதிகளில் பல்வேறு வகையில் எமக்கு பல உதவிகள் புரிந்த எமது பகுதிக் கிராம அலுவலர்

### திரு. சின்னத்துரை பாலசுந்தரம்

அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம அலுவலர் தரம் 1 இக்கு பதவி உயர்வு பெற்றுள்ளதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சென். பீற்றேர்ஸ் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்,
புலோப்பளை கிழக்கு.

கிளாலி கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்.

(82483)



## கண்ணீர் அஞ்சலி

எங்கள் பாடசாலையின் முன்னாள்
பகுதி நேர ஆங்கில ஆசிரியை
செல்வி அ. மரியவசந்தி
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அருளானந்தம் சந்திரபூமலர்

அவர்கள் நேற்று 02-01-2001 காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/மல்லாகம்
விசாலாட்சி வித்தியாசாலை.

(82471)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
செ. டினோஸ்
அவர்களின் அன்புத் தந்தையார்

### இளையவி செல்வராசா

அவர்கள் காலமானதையிட்டு அதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உயர்தர மாணவர் மன்றம்,
யா/யூனியன் கல்லூரி.

(42475)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் செல்லப்பா கந்தசாமி

(இளைப்பாறிய உப அதிபர்)

தோற்றம் 07-10-1916 மறைவு 04-12-2000

04-12-2000 அன்று அமரத்துவமெய்திய எமது குடும்பத் தலைவர் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (03.01.2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*"அன்னமாளிகை" அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.*

(c/14607)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

## கார்த்திகேசு வேலாயுதபிள்ளை

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன முன்னாள் இலிகிதர்)

மகிழ 16-09-1941 நெகிழ 04-12-2000

அள்ளி யணைத்தெம்மை அறிவூட்டி ஆளாக்கி
அவனியிலே உயரவைத்த அப்பாவே!
வெள்ளமெனக் கண்ணீர்-வேகும் மனத்துயரம்
வேதனையை ஈந்தின்று எங்குற்றீர்?
கொள்ளியிட்டு நின்றிங்கு குமுறுறோ மும்மையுன்னி
குறைதீர்க்க மீண்டொருகால் வாரீரோ!
வள்ளிமண வாளனது வண்மைமிகு தாளடைந்து
வாசமுடன் நீர்சுகிக்க அஞ்சலிகள்!

இன்று (03-01-2001) புதன்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*சுப்பிரமணியம் இல்லம், 3 ஆம் கட்டை, துன்னாலை, கரவெட்டி.*

- குடும்பத்தினர்
சந்தைவீதி, கொடிகாமம்.

(82280)

## சமுர்த்தி செயலணிக் கூட்டம்

வலி.தென்மேற்கு,ஜன.3

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் முதலாவது சமுர்த்தி செயலணித் தெரிவுக் கூட்டம் நவாலி வடக்கு(ஜெ-134)கிராமஅலுவலர் பிரிவில் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

நவாலி வடக்கு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் செல்வராஜா சதீஸின் வரவேற்புரையைத் தொடர்ந்து, சமுர்த்தி வளர்ச்சி அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக உதவித திட்டமிடல் பணிப்பாளர் எம்.பாலசிங்கம் உரை நிகழ்த்தினார்.

மேற்படி சமுர்த்தி செயலணித் தெரிவும் அதன் பிரயோகம் பற்றியும் நிர்வாக அதிகாரி செ.செல்வராசா உரையாற்றினார்.

தொடர்ந்து கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம், சமுர்த்தி முகாமையாளர் கே.குமாரவேள், ந.சுசீந்திரராசா ஆகியோரின் உரைகளை தொடர்ந்து ஏழு பேர் கொண்ட நிர்வாக செயலணிக்குழு பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் நவரத்தினம் நரேந்திரனைத் தலைவராகக் கொண்ட ஏழு பேர் அடங்கிய சமுர்த்தி செயலணி தெரிவு செய்யப்பட்டது. (இ-185)

## செயலாளர் நியமனம்

சுற்றுலா, விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளராக டாக்டர் பி.இராமானுஜம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கால்நடை, அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராகக் கடந்த நான்கு வருடங்களாகப் பணியாற்றி வந்தார்.(ஐ-3)

# 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மறைவு 25 - 12 - 1990



திதி 03 - 01 - 2001

## திருமதி மகேஸ்வரி தங்கவேல்

(இளைப்பாறிய ஆசிரியை)

கண்ணின் மணி போலெமைக் காத்த
பெண்ணின் பெருந்தகையே!
விண்ணிற்கு விரைந்தின்று
ஆண்டு பத்துப் போனாலும்
மண்ணில் நாமுள்ளவரை
மறவோம் உம் நினைவை!

*நாவற்காடு, அச்சுவேலி.*

- குடும்பத்தினர்.

(c/14596)


# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

**Obtain Open University Exemptions with our Diplomas**

**The following Course will commence from the first week of February**

**Computer Courses** (Morning & Evenings)

**1. Advanced Diploma in Computer Programming&Data Processing**
Contains Excel,Visual Basic 6.0, C, Fox pro&Assembly Language
(One Year & Fees Rs. 4.500/-)

**2. Diploma in Computer Programming & Data Processing**
Contains Excel,Visual Basic 6.0, Pascal, dbase & Access
(One Year & Fees Rs. 4,000/-)

**3. National Certificate in Computer Applications. (Basic&Intermediate Level)**
Fees - Rs.2000/-

**4. Australian Computer Society (ACS) Examinations (all 4 Parts)**
Jan./Nov.Exams Fees: 2000/-

**5.Certificate Courses in Business&Scientific Applications (3-4Months)**
Fees: Rs. 1.000/- each.

* MS Word 2000
* MS Excel 2000
* MS Access 2000
* C/C++
* dbase
* Pascal
* MS Visual Basic 6.0
* MS Power Point
* FoxPro
* Computer Hardware

Note: We have currently obtained Membership at Association of Computer training Organisations of Sri Lanka (ACTOS), CINTECH, Sri Lanka.

**Technical Courses** (Morning & Evenings)

**6. Diploma Courses:**
(a) 1 Year & Fees. Rs.1450/-
❖ Basic Engineering ❖ Electronics ❖ Civil Draftsman ship
(b) 3 Years & Fees: Rs. 4575/- Electronics&Telecommunications

**7. Craft Courses (Tamil Medium)**
1 Year & Fees Rs.1450/-
❖ Mechanical Craftsmanship Practice
❖ Electrical Wiring & Installation Practice
❖ Automobile Technology (Basic Car Driving will be taught)
❖ Radio & TV Servicing

1. Collect application forms at our centre or Jaffna College Undergraduate Department, Hospital Road, Jaffna
2. Scholarships given to limited number of Students.
3. Send your applications Directly or by post.

Director
*Jaffna College Institute of Technology, Vaddukoddai.*

(c4582)

# அநாதைகளாக அகதிகளாக வாழ்ந்த நிலையில் பரீட்சைகளை எதிர்கொண்ட தென்மராட்சி மாணவர்கள்

## வெட்டுப் புள்ளிகளால் வெட்டப்பட்ட மனங்கள்

அன்பழகன்

இலங்கையின் கல்விப்பகுதியில் இரு முக்கிய பரீட்சைகளாக தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையும் விளங்குகின்றன. எல்லா மாவட்டங்களிலிருந்தும் பல லட்சக்கணக்கில் மாணவர்கள் தோற்றினாலும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினரே சித்திகளையும், வெற்றிகளையும், சலுகைகளையும், பல்கலைக்கழக அனுமதியையும் பெறுகின்றனர். இப்பரீட்சையின் வெற்றிக்கு மாவட்ட ரீதியான தரப்படுத்தலே மிகவும் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. அதற்கு உண்மையான காரணங்கள் இருந்தாலும் மக்கள் சமுதாயம் நீதியான வகையில் இதனை ஏதோ ஒரு விதத்தில் ஆதரித்தும் எதிர்த்தும் வந்துள்ளது; வருகின்றது.

### வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கே தாக்கம்

இந்த வகையில் தரப்படுத்தலால் கூடியளவு தாக்கத்தினை வடக்கு-கிழக்கு மாகாண மாணவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அசாதாரண நாட்டுச் சூழ்நிலைகளால் மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாவதை நாம் கண்கூடாகக் காணமுடிகின்றது. மாகாண மட்டத்தை விடுத்து மாவட்ட மட்டத்தில் நோக்கும்போது-குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் - தற்போது பிரதேச ரீதியில் காலம் காலமாக யுத்த நெருக்கடிகளால் மக்கள் ஏதோ ஒருவகையில் தாக்கப்படுவதை அவதானிக்கின்றோம்; அனுபவிக்கின்றோம்.

### தென்மராட்சியில்

அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட கொடிய யுத்த நெருக்கடிகளால் மக்கள் பலத்த உயிர், உடைமைகளை இழக்கவேண்டி நேர்ந்தது. அதுமட்டுமல்ல கல்விப்புலங்களை, புத்தகங்களை, பாடக்குறிப்புக்களை இழந்து மனநிலை பாதிப்படைந்த நிலையில் பரீட்சைக்குத் தம்மைத் தயார்படுத்துவதில் அப்பகுதி மாணவர்கள் பட்ட வேதனைகள், துன்பங்கள் வார்த்தைகளில் வடிக்க முடியாதவை. இந்தச் சூழ்நிலையில் இருபரீட்சைகளையும் அங்கிருந்து இடம் பெயர்ந்து அநாதைகளாகவும் அகதிகளாகவும் வாழ்ந்த நிலையில் எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இப்பரீட்சையின் பெறுபேறுகள்; அவர்கள் கல்வியில் ஏற்படுத்திய தாக்கத்தை, விளைவுகளை எடுத்து நோக்கின் மிகவும் வேதனைக்குரிய விடயம்.

குண்டுகளாலும், வெடியோசைகளாலும், காயம்பட்டுச் சிதறிய உடல்களையும் பிணங்களையும் பார்த்து மனமுடைந்து வெந்துபோன மாணவப்பிஞ்சு உள்ளங்கள் தரம் 5 பரீட்சையை அரைகுறையாகவே எதிர்நோக்கினர். அதாவது கல்விச்சூழல் பாதிப்பு, உடல் உள பாதிப்பு போன்ற நிலைகளிலேயே இப்பரீட்சையை எழுத வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள்.

அந்த நிலையில் எழுதிய பரீட்சைப் பெறுபேறுகளும் நினைத்துப் பார்க்க முடியாத அளவு பின்னடைவைக்காட்டின. இந்த நிலையில் குறிப்பிட்ட பிரதேச ரீதியிலான பிள்ளைகள் தமது ஒவ்வாத சூழல், சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் பெற்ற பெறுபேறு அவர்களை வெற்றிக்கு இட்டுச்செல்லாது நாடளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் தடுத்தன.

பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு நிவாரணத்தையும் நிதியுதவிகளையும் வழங்கும் அரசும், நிறுவனங்களும் கல்வியில் வெற்றிகளை இழந்து கலங்கும் இவர்களின் பரிதாபமான நிலைக்குத்தரும் நியாயமான இழப்பீடு என்னவாக அமையும்? என உள்ளங்கள் ஏங்கித தவிக்கின்றன.

நிவாரணத்தை ஏற்றுக்கொண்ட-ஒப்புக்கொண்ட - அரசு பரீட்சையில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் பரீட்சை நிவாரணத்தை வழங்கித்தானே ஆகவேண்டும். அது தான் முறையும் தர்மமும்கூட. அம்மாணவர்கள் பரீட்சை முடிவுகளால் உள்ளம் உடைந்து போயுள்ளார்கள். அமைதி இழந்து அந்தரிக்கின்றார்கள். அகம் கலங்கி அழுகின்றார்கள். மாவட்ட வெட்டுப் புள்ளிகளுக்கு மிக அண்மித்த புள்ளிகளைப்பெற்ற பலர் குறிப்பிட்ட பிரதேசங்களில் இருக்கின்றார்கள்.

10 வயதில் வஞ்சகம் ஏதுமறியாத அந்தப் பிஞ்சு உள்ளங்கள் தங்கள் உறவுகளையும், உடைமைகளையும் , உரிமைகளையும் இழந்து வருமானம்இன்றி, உண்ண உணவின்றி, உறங்க உறைவிடங்களின்றி, உடுக்க உடையின்றி, படிக்க ஒளியின்றி கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்த காலமதில் எழுதிய பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் வீழ்ச்சியைத் தந்துள்ளன. எத்தனையோ திறமையுள்ள மாணவர்கள் பிரதேச ரீதியான பாதிப்பால் மாவட்டமட்ட வெட்டுப்புள்ளிகளை எட்டமுடியாமல் போய்விட்டது வருத்தத்திற்குரிய விடயம்.

### அரசுக்குள்ள தார்மீகப் பொறுப்பு

இதனை அரசும், அரசியல் கட்சிகளும் கல்விமான்களும் ஏனையோரும் கவனத்தில் கொள்ள வேண்டும். கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசுக்கு உள்ளது. இந்த வகையில் தென்மராட்சி போன்ற பாதிப்புக்குள்ளான பிள்ளைகளின் கல்வி வாழ்வுக்கு, அவர்களது முயற்சிக்கு உயர்ச்சி தரும் வகையில் கல்வித்திணைக்களம் பரிகாரம் செய்ய முன்வரக்கூடாதா?

வாழ்வின் முடிவுகளை மாற்றும் கல்வி முடிவுகளால் ஒடிந்து போன வாழ்வுக்கு விடிவு கிட்டாதா? கல்வி உலகமே சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீதிமன்றங்களே நியாயமான தீர்ப்புக் கூறவேண்டும்.

பாதிக்கப்பட்ட அப்பிரதேச மக்களின் நிலையைப் புரிந்து கொண்டு பிரதேச ரீதியில் வெட்டுப்புள்ளிகளைக் குறைக்க வேண்டும். பாதிப்புக்களைப் புரிந்து கொண்டு நிதியுதவியும் நிவாரணமும் வழங்கும் அரசாங்கம் அழியாத செல்வங்களை அழியாது காக்க வழிகாட்டவேண்டும்.

வஞ்சிக்கபட்ட மாணவ நெஞ்சங்களுக்கு ஆறுதல் தரவேண்டும். நிர்மலமான அவலவாழ்வுக்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டும். நியாயமான வெட்டுப்புள்ளியினால் கல்விப் பயணப்பாதைக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

இம்மாணவமணிகளின் நலனில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும், அரசியல் கட்சிகளும், இடம் பெயர்ந்தோர் சங்கங்களும் அவசியமாகவும், அவசரமாகவும் குரல் கொடுக்க வேண்டும். இதனால் நலிவுறும் குறிப்பிட்ட சமுதாயம் பொலிவுற வேண்டும்.

★

---

# பண்பாட்டையும் கலாசாரத்தையும் காக்க சகலரும் உழைக்க வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் நீதிபதி உரை

வலிகாமம் மேற்கு, ஜன.3

"உலகத்தில் 33 நாடுகளில் தமிழ மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணத்திலேயே தமிழ் மக்கள் தமிழையும் பண்பாட்டையும் கலாசாரத்தையும் நல்ல முறையில் வளர்த்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்று 1953ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்த தமிழ்நாட்டு அறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை கூறினார். இன்று அந்த நிலைமை மாறிவிட்டது. உலகத்துக்கு தமிழையும் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கற்பித்த யாழ்ப்பாணம் மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்கு எல்லோரும் உழைக்க வேண்டும்."

இவ்வாறு முன்னாள் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு கூறினார்.

அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் எழுதிய கந்தபுராண வசன காவியநூல் அறிமுகவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

கந்தபுராண வசன காவிய நூல் அறிமுகவிழா சித்தன்கேணி ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நூல் அறிமுகவிழா ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. நூல் அறிமுகவிழாவை அருட்கவி சீ.விநாசித்தம்பி, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

மு.திருநாவுக்கரசு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் எங்கு பார்த்தாலும் பண்டிதர்களையே பார்க்க கூடியதாக இருக்கின்றது. நல்ல தமிழை மிகவும் அழகாக இங்கே தான் பேசுகின்றனர் என்று யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாண மக்களை மிக உன்னத நிலையில் வைத்துப் புகழ்ந்து பேசினார்.

இன்று பேச்சில் நல்ல தமிழ் இல்லை. பிள்ளைகளுக்கு சூட்டப்படும் பெயரில் தமிழ் இல்லை. உடையில் ஆணா பெண்ணா என்பது தெரியாமல் இருக்கின்றது.

இந்து மதத்தின் பெருமையுடனும் தமிழ் மொழியின் இனிமையுடனும் வனப்புடன் வாழ்ந்த மண் இன்று சீர்கெட்டுக் கிடக்கின்றது. சுந்தரத் தமிழும் சைவசமயமும் என்றும் இந்த நாட்டில் அழிந்து போகாமல் இருக்க தமிழர்கள் தமிழர்களாக வாழவேண்டியது அவசியம். இன்று நாம் இடம்பெயர்ந்து கொண்டே இருக்கின்றோம். இதற்குக் காரணம் எம்மிடையே தெய்வபக்தி இல்லை; நல்ல சிந்தனை இல்லை; அன்பு இல்லை; மாயை வலையில் சிக்குண்டு செய்யத் தகாதவற்றையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றோம்.

இந்த நிலைமாறி மனிதன் மனிதனாக வாழ வேண்டும். இன்று எமது இளம் சந்ததியினருக்கு கந்தபுராணம் மற்றும் இந்து சமயத்தைப் பற்றி தெரியாது. ஆனால் சினிமாவைப் பற்றி நன்குதெரியும்

இளம் சந்ததியினர் படிக்கக்கூடிய இலகு தமிழில் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் கந்தபுராண வசன காவியத்தை நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். ஆதலால் அனைவரும் இதனைப் படித்து பயன்பெற்று எமது சமயத்தையும் தமிழையும் வளர்க்க முன்வரவேண்டும், என்று கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கும் காஞ்சிபுரத்துக்கும் நீண்ட காலமாக இருந்த தொடர்பு காரணமாக காஞ்சிபுரத்தில் கந்தபுராணம் வெளியிடப்பட்டவுடன் யாழ்ப்பாணத்திற்கும் வந்துவிட்டது. கந்தபுராண கலாசாரம் யாழ்ப்பாணத்தில் வேரூன்றி இருந்தது. இதன்காரணமாகவே கந்தபுராணத்துக்கு உரை எழுதிய பானுகவியின் உரை தமிழ் நாட்டில் அழிந்து போய் இருந்தும் யாழ்ப்பாணத்தில் என்னிடம் அழியாமல் இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பானுகவியின் உரையை நான் தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளேன்.

இந்த நிலையில் காலத்துக்கு காலம் யாழ்ப்பாணத்தில் கந்தபுராணத்துக்கு உரைகள் வெளிவந்து கொண்டிருந்தன. கந்தபுராணம் தோன்றிய இடத்தைவிட, நிலையான இடத்தை யாழ்ப்பாணத்தில் பெற்றுவிட்டது. கந்தபுராணம் ஒரு குறியீட்டுக் காவியம் அவ்வப்போது காலத்துக்குக் காலம் பலர் அதற்கு உரைகள் எழுதியுள்ளனர்.

கந்தபுராணப் படலம் எமது ஆலயங்களில் தொன்றுதொட்டு இடம் பெற்று வருகின்ற நிகழ்வாகும். யாழ்ப்பாணத்தையும் கந்தபுராணத்தையும் என்றும் பிரிக்க முடியாது. கந்தபுராணத்துக்கு பயன் சொல்கின்றவர்களுக்கு இந்த வசன காவியம் உதவ வல்லது என்று கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் நுண்கலை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சிறப்புரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

உள்ளத்தால் உயர்ந்த வாழ்க்கையை நாம் வாழ வேண்டுமாயின் நல்ல நூல்களை நாம் கற்க வேண்டும். தமிழும் சைவமும் அழிந்து விடாமல் இருப்பதற்கு எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் வளர்க்க வேண்டும். அறம், அன்பு, தருமம் என பன வாழ்க்கை. இந்த வாழ்க்கையே தெய்வீகமானது.

அறம் என்றால் என்ன என்பதை இந்த நூல் எடுத்துக் காட்டுகின்றது. இறையருள் வாழ்வுக்கு மிக நல்ல துணையாக இந்நூல் அமைகின்றது. எமது அவலங்களுக்கு மருந்தாக அமையும் இந்நூல் வாழ்வை வளம் பெறச் செய்யும் என்று தெரிவித்தார்.

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தனது சிறப்புரையில் கூறியதாவது:-

இன்று எமது நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் நாம் தமிழர்கள் எனக் கூறிக் கொள்வதற்கு வெட்கப்படுகின்றனர். தமிழில் உரையாடுவதைத் பலர் அநாகரிகமாகக் கருகின்றனர். வேற்று மொழியைப் பேசுகின்றனர், ஆங்கிலம் பேசுவதையே பெருமை எனக் கருதுகின்றனர்.

நான் தமிழன், இந்து சமயத்தவன் என்று சொல்லி பெருமைபேசி வாழ்ந்த காலம் இன்று இல்லை. தமிழ்மொழியில் பேசுவது, எழுதுவதைவிட்டு இன்று எம்மவர் ஆங்கில, சிங்கள மொழியிலேயே பேசுகின்றனர், எழுதுகின்றனர். பண்பாட்டையும் கலாசாரத்தையும் மறந்து வாழ்கின்றனர்.

இந்துக்கள் இன்று தமது பண்பாட்டு பழக்க வழக்கங்களை பேணி வருவது குறைந்து செல்கின்றது. நெற்றியில் விபூதி பூசி பொட்டு வைப்பது அநாகரிகம் எனக் கருதுகின்றனர். இளம் சந்ததியினர் தமிழரின் சகல கலாசார பண்பாட்டுகளையும் இழந்து வாழும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்ற நிலைமையே இன்று தோன்றியுள்ளது. அந்நியக் கலாசார மோகத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

அன்று நாவலர் எமது சைவத்தையும் தமிழையும் காப்பாற்றினார். இன்று அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் எமது சைவத்தையும் தமிழையும் காப்பாற்றுகிறார். அவரின் இந்தப் பணிக்கு முன்னோடியாகத் திகழும் கந்தபுராண வசன காவிய நூலை நாம் எல்லோரும் வாங்கி எமது இளைய தலைமுறையினர் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்போம் என்று கூறினார்.

சைவத் திரு.சி.சக்திகிரீவன், யாழ். பல்கலைக்கழக மாக்வுல் ஐ.கோ.சந்திரசேகரம் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

வாழ்த்துரையை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும் ஆலய பூசகர் பிரம்மஸ்ரீ நா. கமலநாதசர்மா ஆசியுரையையும் வழங்கினார்கள். (ம-175)

---

# நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்வதற்காக விண்ணப்பம் செய்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சைக்குப் வருபவர்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பாடசாலை விடுகைப் பத்திரம், குடும்ப விவர அட்டை போன்றவற்றுடன் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-5)

## திருத்தப்படாத நிலையில் வீதிகள்

கொக்குவில் பிரதேச சபைக்கு உட்பட்ட அச்சுக்கூட வீதி, பழைய தபாற்கந்தோர் வீதி என்பன சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

பிரதேச சபைக்கு உட்பட்ட பல சிறு வீதிகள் கூட திருத்தப்படுகின்ற போதிலும் இவ்வீதிகள் திருத்தப்படாமல் உள்ளது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-86)

---

# ஊர்காவற்றுறை, புங்குடுதீவுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

ஊர்காவற்றுறை,ஜன.3

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களுக்கு மின் விநியோகம் மேற்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் இந்தமாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான ந.மதனராஜா தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சரான கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் இது தொடர்பாக தாம் கலந்துரையாடியதை அடுத்து அமைச்சர் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இதற்கான ஜெனரேட்டர்கள் இம்மாத இறுதிக்குள் இங்கு வந்து சேருமென அவர் மேலும் கூறினார். (ம-16)

# 'பாஜ்'ஜினை அகற்ற நிதி ஒதுக்கீடு

ஊர்காவற்றுறை,ஜன.3

ஊர்காவற்றுறை துறைமுகத்தில் கடலினுள் அமிழ்ந்து கிடக்கும் சேதமடைந்த 'பாஜ்'ஜினை அகற்றுவதற்கு ஊர்காவற்றுறை பிரதேசசபை கடந்த ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.தற்போது இந்த 'பாஜ்'ஜினை அகற்றும் பணி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அகற்றப்படாதிருந்த இந்த 'பாஜ்' ஜினால் தீவுப்பகுதிகளில் இருந்து வரும் படகுகளை துறைமுகத்தில் அணைப்பதில் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-16)

# புதுவருட பலன்

நம்பிக்கை ஒளியாக – வெண்புறா வடிவாக – சமாதானத் தூதராக இறைவனின் வழிகாட்டியாக ஒருவர் வரும் காலமாகும்.

| | | | |
|---|---|---|---|
| 7 | சனி | வியா. | ராகு |
| வெள். சந். | 01-01-2001 இல் இராசிச் சக்கரம் | | 11 |
| 5 | | | 12 |
| சூரி. புத. கேது | 3 | செவ். | லக். |

*வியாழன் - புதன் - சூரியன்*
*மஞ்சள் - பச்சை - வெள்ளை*

**ஸ்ரீ விக்கிரம வருஷம் மார்கழி மாதம் 16ஆம் திகதி ஞாயிறு பின்னிரவு 12 மணி 01 நிமிஷமளவில் கன்னி இலக்கினத்திலும் கும்ப இராசியிலும் பூரட்டாதி நட்சத்திரத்திலும்- சித்த யோகத்திலும் கூடும் வேளையில் புதிய வருஷம் பிறக்கின்றது. பிறப்பு - பெயர் ஆதிக்க எண்களான 3-5-1 எண்களில் பிறந்தவர்களுக்கு கல்விச் சிறப்பு, தொழில் வரவு, திருமணப்பேச்சு, புகழ் பரப்பும் காலமாக வருஷம் பிறக்கின்றது.**

**நாம் இலங்கை மாதாவின் குழந்தைகள் என எல்லோரும் உணரத்தக்கதாகப் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை வழி நடத்த இந்தியா வழிவகுக்கும் காலமாக இந்த வருஷம் அமையும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன. மேலும் இந்தியாவே இனப்பிரச்சினையில் தலையிட்டு இறுதியாகத் தீர்வைத் தரும் நாடாகும்.**

## மேடம்

சனீஸ்வரன் தாக்கம் உண்டு. காணி பூமிக்காக அலைச்சல் ஏற்படும். இருக்கும் சொத்தைப் பாதுகாக்கவா? அல்லது புதிய காணி வாங்கவா? என அடிக்கடி சிந்திப்பீர்கள். தடைதாமதம் இழுபறி இருக்கத்தான் செய்யும். சமாளித்துக் கொள்ளுங்கள். ஏப்ரல் 2001க்குப் பின்பு மாற்றங்கள் கொடுக்கும். ஜனவரி, ஓகஸ்ட், டிசெம்பர், பெப்ரவரிபோன்ற மாதங்களில் மாற்றங்கள், நன்மைகள் கொடுக்கும். அரசியலில் - அரசியல் வாதிகளின் உதவிகளால் புதிய இடம் அல்லது பதவிகள் வரலாம். குடும்பத்தில் புத்திரர்கள் சிறப்பு அடைவார்கள். சனீஸ்வரனுக்குப் பிரீதிகள் செய்யுங்கள். அந்தோனியார், மாதா ஆலயத்துக்குத் தீபம் எரிய எண்ணெய் கொடுத்து வாருங்கள் மாற்றங்கள் ஏற்படும்.

## இடபம்

தொட்டுவிட்ட ஏழரை தூரத்தே துரத்தும் என்பார்கள் கட்டுப்பட்டு இருந்தாலும் எதிர்ப்பாலாரால் கலகங்கள் தேடியோடிவர இடமுண்டு. ஓகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும். இடமாற்றங்கள்வரும். தொழில் ஸ்தானத்தில் குறையும் உண்டு. சக உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும். அரச அதிகாரிகள உதவிகள செய்வார்கள். இறுதி வெற்றிக்காகப் போராடியபடி இருப்பீர்கள். உஷ்ண பீடைகள், வயிற்று நோ என்பவற்றால் வருந்தநேரிடும். மருந்துத்துறை, இசைத்துறை, தொழில்நுட்பத்துறை போன்ற துறையினர் அதிகலாபங்கள் அடைவார்கள்.

## மிதுனம்

நேற்றுவரை ஒட்டி இருந்தவர்கள் இன்று எதிர்ப்புக் காட்டுகின்றார்களே என்ற ஏக்கம் உங்களுக்கு அடிக்கடி வரும். அவசரத்தில் பல சந்தர்ப்பங்களைத் தவறவிடுவீர்கள். இதுவரை செய்து வந்த உங்கள் தொழிலின் குறைபாடுகளைச் சிலர் புட்டுப் புட்டுக் காட்டுவார்கள். விசாரணைகள் தொடரும். எனவே நிதானமாகச் செயற்படுங்கள். விதி காரகனான ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கம் உங்களைக் கலங்கவைக்கும் காலமாகும். இச் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகப் பொதுத் தொண்டுகளை செய்வதில் நிதானமாக இருந்து வரவும். குடும்பத்தினரின் நன்மைகளுக்காக அதிக நேரம் செலவிடுவீர்கள். இட மாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் எதிர்பார்த்தவை கிடைக்காமல் போக இடமுண்டு.

## யாருக்கு நற்பலன்?

★ 3,5,1 ஆதிக்க எண், பிறப்பு, பெயர் எண்காரர்களுக்கும்,

★ மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு - இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு முழுப்பலனும், இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு அரைப்பலனும் கொடுக்கும்.

★ மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம், மகம், பூரம், உத்தரம், அத்தம், சித்திரை, மூலம், பூராடம், உத்தராடம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி, ஆகிய 14 நட்சத்திரங்களிலும் பிறந்தவர்களுக்கு அவரவரின் ஆதிக்க வலுவுக்கு ஏற்ப நன்மைகள் சிறப்புகள் கொடுக்கும்

## கடகம்

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள். முயற்சியால் உயற்சி அடைவீர்கள் இட மாற்றங்கள் நன்மை கொடுக்கும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். இனசன உதவிகளால் நற்பலன்கள் அதிகரிக்கும். நரம்புச் சோர்வு இருக்கச் செய்யும். ஜூலை, ஒக்ரோபர், நவம்பர், ஜனவரி, ஏப்ரல் ஆகிய மாதங்களில் நன்மைகள் கொடுக்கும். வெளிநாட்டிலிருந்து உற்சாகமான பதில்கள் கிடைக்கும். சிலருக்கு இலாபங்கள் அதிகரிக்கும். அடிக்கடி வரும் மாற்றங்களாலும், மன உற்சாகத்தாலும். வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டபடி இருக்கும். அரசியல்வாதிகளுக்கு விசேடமான காலமாகும்.

## சிங்கம்

தொழில்ஸ்தானத்தில் சனி வருவதனால் பல மாறுதல்கள் நிச்சயம் ஏற்படும். எதிர்ப்பாலார்கள் நன்மை செய்வார்கள். இலாபங்கள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். அரச உதவிகள் கிடைக்க வழி பிறக்கும். ஓகஸ்ட், நவம்பர், டிசெம்பர், பெப்ரவரி, ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும். பெரியவர்கள், அரச அதிகாரிகள் உதவி செய்வார்கள். நெஞ்சு, இரத்தம் சம்பந்தமான வருத்தம், நாரிநோ என்பன வர இடமுண்டு. மருத்துவத்துறை , விஞ்ஞான ஆராய்ச்சித் துறை, குருத்துறை, எண்ணெய் வகை விற்பனையாளர்களுக்கு விசேடமான நன்மைகள் ஏற்படும். தெய்வ வழிபாடு நன்மைகள் தரும்.

# உங்களுக்கு எப்படி?

## கன்னி

குடும்பத்தில் கொண்டாட்டங்கள் இருக்கச் செய்யும், பொருள் ஸ்தானத்தில் வியாழனுடன் சனி ஆதிக்கம் கலக்கத்தைத் தரும் சொல்வாக்கு செல்வாக்கைப் பெறும். நாலு பெரிய மனிதர்கள் உங்களை நாடி வந்து ஆலோசனை கேட்பார்கள். தொழில்ஸ்தானத்தில் வரவு செலவு சமநிலைப்படும். வீடு வாசலுக்காகப் பொருள் செலவு செய்வீர்கள். செப்ரெம்பர், டிசெம்பர். மார்ச், மே, ஜூன் ஆகிய மாதங்களில் நற்பலன்கள் அதிகரிக்கும், சிரித்துச் சிரித்துக் கருமமாற்றி நன்மை பெறுவீர்கள். மூல வருத்தம், நெஞ்சுநோ, சிரசு வருத்தம் எனவரும், செய்தித்துறை, ஆசிரியத் துறையினர்கள் அதிக மாற்றங்களையும் இலாபங்களையும் அடைவார்கள். அவசரப்பட்டு இடம் மாறி துன்பப்பட வேண்டாம். எதிலும் நிதானம் வேண்டும்.

## துலாம்

பெருந்தன்மை, சமநீதி, புன்சிரிப்பு எதையும் செய்யும் ஆற்றல் என்பன கொடுத்துக் கொண்டிருக்கும். ஆயினும் விதிகாரகனான சனீஸ்வரன் அட்டமத்தில் வந்து தட்டிக் கேட்பான். தாரஸ்தானத்தில் விசாரணைகள் அட்டமத்தில் சனித்தாக்கம் இருப்பதனால் அடிக்கடி கலக்கமான நிலை வந்து போகும். ஜனவரி, பெப்ரவரி, ஏப்ரல், ஜூலை, ஒக்ரோபர் போன்ற மாதங்களில் பல மாற்றங்கள் ஏற்படச் செய்யும். பிரயாணத்தால் பொருள் செலவுகள் அதிகரிக்கும். தோல் வருத்தம், கை, கால்நோ, வயிற்று வருத்தங்கள் என்பன கொடுக்கும், பொருள் இழப்பு, களவு போதல் ஏற்படலாம். கவனமாக இருக்கவும். குலதெய்வ வழிபாடு, சனீஸ்வரனுக்கு அர்ச்சனை அடிக்கடி செய்து வரவும்.

## விருச்சிகம்

எந்தநிலை வந்தாலும் சமாளித்துக் கொள்ளவீர்கள். நல்லவர்கள், பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும். சுயகௌரவம் மேலோங்கும். இடமாற்றம் செய்யலாமா? என அடிக்கடி கேட்பீர்கள். மாறாமல் இருப்பது நன்று. செய்தி ஒன்று அதிர்ச்சி தரும். பெப்ரவரி, மார்ச், மே, ஜூலை, ஓகஸ்ட், நவம்பர் ஆகிய மாதங்களில் நன்மைகள் அதிகரிக்கும். புதிய தொழில்ஸ்தானத்தில் ஊக்கமாக இருப்பீர்கள். வாய்வு, நாசிநோ, வயிற்று வருத்தங்கள் கொடுக்கும் தொழில்நுட்ப தொழில், மருந்துத்தொழில், வியாபாரம், கோயில் வேலைகள் செய்பவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். சிலருக்கு ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். கட்டுப்படுத்தவும்.

## தனுசு

எதற்கும் போட்டியான மனோநிலை ஏற்பட்டபடி இருக்கும். மார்ச், ஏப்ரல், ஜூன், ஓகஸ்ட், செப்ரெம்பர், டிசெம்பர் ஆகியமாதங்களில் மாற்றங்களும் நன்மைகளும் அதிகரிக்கும். தேடி ஓடிப் பொருள் சேர்ப்பீர்கள். அரசியல் பேசிக் குழப்ப நிலைகள், மனச்சஞ்சலங்கள் வரஇடமுண்டு. இனஜனங்களின் உதவிகள் கிடைக்கும். சட்டத்துறை, வங்கி, வட்டி ஸ்தாபனங்கள், புடைவைத்துறை, பிரயாணத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும் காலமாகும். ஏப்ரல் 2001க்குப் பின்பு அதிக மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. வயிற்று வருத்தத்திற்கு வைத்தியம் செய்துவரவும்.

## உலக மாற்றங்கள்

இந்தியாவின் புகழ் ஓங்கும். அமெரிக்கா, பாகிஸ்தான், இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளின் ஆட்சிப்பீடம் மாற்றியமைக்கப்படும். சீனா, கனடா, கொரியா நாடுகளில் எதிர்ப்புரட்சி, இளைய தலைமுறையினரின் ஆதிக்கம் வலிமையாகும்.

★ **S,L,C,G** - முதல் எழுத்துக்கள் உள்ள நாடுகளில் அதிக மாற்றம், சட்டதிட்டங்கள், அமைச்சரவைகள் மாற்றி அமைக்கப்படும்.

★ **A,IJ,Q,Y** - முதல் எழுத்துக்கள் உள்ள நாடுகளில் கடும் போராட்டத்துடன் ஆட்சிப்பீடங்களில் புதியவாகள் வருவார்கள்.

★ **N,E,X,H** - முதல் எழுத்துக்கள் உள்ள நாடுகளில் இராணுவ ஆட்சிகள் தலைதூக்கி கலகம் வந்தாலும் மக்கள் தலைமைப் பீடத்தை மாற்றி அமைப்பார்கள்.

## மகரம்

எந்த விஷயத்தையும் நாலு பேரைக் கேட்டு செய்யுங்கள். விடா முயற்சிதான் உங்களுக்கு நன்மை தரும். உங்கள் அசதியீனத்தால் பல இழப்பு, தவறுகளை விட்டு விடுவீர்கள் இடமாற்றம் சகஜமாகும். பழையன கழிதலும், புதியன புகுதலும் சர்வசாதாரணமாகும் புத்திர அல்லது சகோதர விசயங்களில் அவதானமாக இருக்கவும். ஜனவரி, ஏப்ரல், மே, ஜூலை, செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய மாதங்களில் மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். பித்தவருத்தங்கள் கொடுக்கும். நரம்புச்சோர்வு, மனக்குழுறல் என்பன இருக்கச் செய்யும் செய்தித் துறை, குருத்துறை, ஆராய்ச்சித் துறையினருக்கு மாற்றங்கள் கொடுக்கும். அரசியல் பேசி ஆபத்தை எதிர்நோக்கலாம். அவதானமாக இருக்கவும்.

## கும்பம்

அது ஒரு விதி. காலங்கள் மாறலாம் பலன்கள் மட்டும் மாறாது போன்ற நிலை உங்களுக்கு ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் பொருளாதார நிலைக்காகப் போட்டிகள் ஏற்படும். கைநீட்டி வாங்கிய கடன்காரர்கள் கேட்டால் கைநீட்டிப் பேசுவார்கள் எனினும் பெப்ரவரி, மே, ஜூன், ஓகஸ்ட், ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் நன்மைகள் நடக்கும். போன இடத்திலிருந்து திரும்பி வந்து ஆறுதல் அடைவீகள். கற்றவர்களும், உற்றவர்களும் கருத்துடன் உங்களை நாடி வந்து ஆலோசனை கேட்பார்கள். சளி, நரம்புப்பிடிப்பு, குடல் வருத்தங்கள், வாய்வு, வாத உளைவுகள் வர இடமுண்டு. விவசாயத்துறை, வியாபாரத்துறை ஆசிரியத்துறை போன்ற துறையினருக்கு சிறப்பான பலன்கள் ஏற்படும். தூரதேசங்களை நாடி ஓடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

## மீனம்

அன்பும், பண்பும் மலர வேண்டுமாயின் ஒருவரையொருவர் மன்னிக்கும் மனோபாவம் வேண்டும் என அடிக்கடிசொல்லுவீகள். உலகம் கேட்டு விட்டதென அடிக்கடி சொல்லுவீர்கள். சனீஸ்வரன் ஏப்ரல் 2001 வரையும் பல பிரச்சினைகளைத் தந்தாலும் அதன் பின்புதான் நற்பலன்கள் அதிகரிக்க இடமுண்டு. மார்ச், ஜூன், ஜூலை, செப்ரெம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் நன்மைகள் அதிகரிக்கும். சகோதரர், அயலவர்களின் உதவிகள் கிடைக்கும் காலமாகும். திடீர் பிரயாணங்கள், அந்நியர்களின் உதவிகளால் எதிர்பாராத மாற்றங்கள் என்பன ஏற்படலாம் சளி, நரம்பு, அல்சர், படபடப்பு என்பன ஏற்பட இடமுண்டு. செய்தித்துறை, அரசியற்துறை, பிரயாணத்துறை என்பன போன்ற துறையினருக்கு அதிக நன்மைகளும் மாற்றங்களும் கொடுக்கும்.

**மகாதேவா ஜோதிடம்**

---

# நெடுந்தீவுக்கு அம்புலன்ஸ் படகு வழங்குமாறு கோரிக்கை

அவசர நோயாளர்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு நெடுந்தீவு மாவட்ட அரசின் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் படகு ஒன்று தேவை என வைத்திய அதிகாரி டாக்டர் மயில்வாகனம் இராசையா தெரிவித்தார்.

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் படகு தேவை என பல தடவைகள் அரசாங்க அதிபரிடமும், நெடுந்தீவு பிரதேச செயலரிடமும் கோரியும் இதுவரை எந்த வித பலனும் ஏற்படவில்லையென அவர் மேலும் கூறினார். (இ-185)

## இளைஞர் விடுவிப்பு

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட கனகலிங்கம் அஜந்தன் என்பவர் சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் நேற்றுமுன்தினம் யாழ்.நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார். (ம-5)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனம் ஒன்றுக்கு(கந்தர்மடம் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில்) வீடு தேவை. தொடர்பு: விள.இல.1169, மே/பா உதயன். (82449)

### விற்பனைக்கு

மர யன்னல்கள், கதவுகள், பலகைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 73, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (82448)

பிளேற்றின் **1/8 size** மெசின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருவள்ளுவர் (யா.மா.சபை அருகில்) 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (82446)

### MATHS

ஆண்டு 6 தொடக்கம் **O/L** வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சரகணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளும் ஆரம்ப அறிவிலிருந்து குறைந்த காலத்தில். விசேட சித்தியடைவதற்கு வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன். **C/o - B.C.**பாலசிங்கம். இல.3, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (82435)

### தவறிவிட்டது

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை வீரசிங்கம் கஸ்தூரி என்பவருடைய வி. அ. அ. (இல.091300409) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 846, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவ ரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (82442)

ஆறுமுகம் தியாகேஸ்வரி என்னும் பெயருடைய தே.அ. அட்டையும் வேலாயுதபிள்ளை தியாகேஸ்வரி என்னும் பெயருடைய வி. அ. அட்டையும் ஆஸ்பத்திரி வீதி யாழ் நகரில் பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிற்றி மெடிக்கல், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என் னும் முகவரியில் ஒப்படைத்துதவ வும். சன்மானம் வழங்கப்படும். (82443)

### இலக்கியக் கட்டுரைகள்

10-11ஆம் தரங்களில் விருப்பப் பாடமான தமிழ் இலக்கியத்தைக் கற்கவும் கற்பிக்கவும் உதவக் கூடிய 38 கட்டுரைகள், 325 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கிய விமர்சன நூல். (82413)

### தேவை

மோட்டோ றோலா **(T.P.LINE)** உபகரணங்கள் நியாயமான விலையில் வாங்கப்படும். தொடர்புக்கு: க.இராசையா, பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய். (82458)

### கார் விற்பனைக்கு

**Austin Cambridge A-60 Model** [வெள்ளை] கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு.சதானந்தன், **5/1,** புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (82457)

### பாதாள உலக கும்பல்களின் துப்பாக்கிகள்

தற்போது பாதாள உலகக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தும் துப்பாக்கிகளில் 7 ஆயிரம் துப்பாக்கிள் வரை படையிலிருந்து தப்பியோடியவர்களுடையவை என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தப்பியோடும் சிப்பாய்கள் மிகக் குறைந்த விலையில் பாதாள உலக கும்பல்களுக்கு துப்பாக்கிகளை விற்பனை செய்வதுடன் இன்னும் சிலர் நேரடியாகவே இவ்வாறான கும்பல்களுடன் சேர்ந்து செயல்படுவதாகவும் கூறப்படுகிறது.

**A/L 2003**

(கலை, வர்த்தக வகுப்புக்கள்)

**ஆரம்பம்:**
06-01-2001
மாலை 3.00 மணி

**ஸ்ரார்**

**கல்வி நிலையம்,**
சுன்னாகம். (82456)

# நாட்டில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என்கிறார் பிரதமர்

கொழும்பு,ஜன.3

வடக்கு - கிழக்கில் இடம் பெறுவது உரிமைப்பிரச்சினை அல்ல, பயங்கரவாதப்பிரச்சினையே. அந்தப்பிரச்சினை ஒழிந்த பின்பே சமாதானத்தைப்பற்றிப் பேசுவோம்.

இப்படிக் கூறியுள்ளார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கத்தியால் ஒருவரைக் குத்திக் கொலை செய்வது பயங்கரவாதம் அல்ல. நன்கு திட்டமிட்டுச் செய்வதே பயங்கரவாதம். அத்தகைய பயங்கரவாதமே வடக்கு - கிழக்கில் உள்ளது.

அந்தப்பயங்கரவாதத்தையும், அதைப்புரிபவர்களான விடுதலைப் புலிகளையும் ஒழித்த பின்பே சமாதானம் பற்றிப் பேச முடியும்.

சமாதானம் குறித்துப் பேசக் கூடியவர்கள் விடுதலைப்புலிகள் அல்ல. அவர்கள் சமாதானத்தை அல்ல பயங்கரவாதத்தையே நேசிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் இடம் பெற்றாலும் யுத்தம் தொடரும். அவர்களுடன் பேச்சு நடத்தி நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படும் வரை யுத்தம் நிறுத்தப்படமாட்டாது - என்றார். (இ-3)

## கிறிஸ்தவம்

பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம்


**A/L 2003**
**05-01-2001 வெள்ளி 4.00 p.m.**

**G.A.Q 2001**
05-01-2001 வெள்ளி **5.00 p.m.**

**A/L 2000 *மீட்டல் வகுப்பு***
08-01-2001 திங்கள 5.30 **p.m.**

***ஆசிரியர்: திருமதி சுனித்தா வெனான்சியஸ்***
*54, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.* (82444)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 12 - 12 - 1976

உதிர்வு 20 - 11 - 2000

## அமரர் அருட்பிரதாசன் முரளீதரன்

*(கலைவாணி நகைமாட உரிமையாளர்)*

இளமையில் வாழ்வை இனிதுற அமைத்தாய்!
இதயத்தில் மனைவிக்கு இடமொன்று கொடுத்தாய்!
பழகும் நண்பர்களுக்கு பகலென்ன இரவென்ன
பகலவனாய் ஒளிர்ந்தாய்!
நினைவினில் எம் குடும்பத்தைக் கண்போல் காத்தாய்!
நிமலனே நித்தியா முரளீதரா!
நீ எம்மனத்தே என்றென்றும் வாழ்வாய்!

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*திகிரி ஒழுங்கை,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*

மனைவி **மு.யஷோ**
**தாய், தகப்பன், மாமன், மாமி,**
**குடும்பத்தினர்.** (c/14610)

# இதய அஞ்சலி



## ஆறுமுகம் துரைச்சாமி

(கோப்பாய்)

ஆசானாகவும் வழிகாட்டியாகவும்
எங்கள் வாழ்வின் முன்னேற்றத்துக்கு
உறுதுணையாக இருந்த
துரைச்சாமி அண்ணனின் மறைவுக்கு
எங்கள் இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவைப் பிரார்த்திக்கின்றோம்.

**சி.மகேசன் குடும்பம்**
**சி.குமாரசாமி குடும்பம்**

*தில்லைகட்டி ஒழுங்கை,*
*சுன்னாகம்.*
(82425)

5000 **DCS** இன் 5000

**5000 SCHOLARSHIPS**

***விண்ணப்பமுடிவுத் திகதி 05-01-2001***

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

***LECTURES BY:* MR.M.A HARI**

**புதிய பிரிவு ஆரம்பம்**

**06.01.2001 சனி காலை 11 மணி**

SATURDAY, SUNDAY 11a.m - 12 p.m

DIRECTOR

**HARY'S INSTITUTE**

KONDAVIL EAST, KONDAVIL. (82426)

# துயர் பகிர்கின்றோம்

நேற்று (02-01-2001) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த உடுவில் இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த

**திருமதி**
## அருளானந்தம் சந்திரபூமலர்

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

***உடுவில் அருள்மிகு***
***ஸ்ரீ ஞான வைரவர் ஆலய***
***பரிபாலன சபை.*** (82462)

*சுன்னாகம்.*

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

## யாழ்ப்பாணம்

### பாடசாலை மாணவர்களுக்கிடையிலான

# மாபெரும் கண்காட்சிப் போட்டி

காலம்: **11, 12 & 13-01-2001**
(வியாழன், வெள்ளி & சனி)

நேரம்: காலை 9.00 மணி முதல்
மாலை 4.00 மணி வரை.

இடம்: **யாழ்.இந்துக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

யாழ்.மாவட்டத்தில் இருந்து பல முன்னணிப் பாடசாலைகள் இக் கண்காட்சிப் போட்டியில் பங்குபற்றுகின்றன. பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் மாணவர்களால் திறம்பட அமைக்கப்பட்ட காட்சிப் பொருள்களை பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் பார்த்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

அத்துடன் மாணவர்களினதும் பொதுமக்களினதும் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் காட்சிப் பொருள்களும் இந்த விஞ்ஞானக் கண்காட்சியில் வைக்கப்படும்.

நுழைவுக்கட்டணம்

**மாணவர்கள் : ரூபா 10.00**
**ஏனையோர் : ரூபா 20.00**

நுழைவுச் சீட்டுக்களை இந்துக் கல்லூரி வாசலில் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகள் முன்கூட்டியே நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: ***திரு.கு.மிகுந்தன்***
(உதவிப் பொதுச் செயலாளர்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்)

முகவரி: தலைவர்,
விவசாய உயிரியல் துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்**
கண்காட்சிப் பொறுப்பாளர் - **JSA**

(C/14601)

# வீட்டுத் தளபாடங்கள் அகற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றனவாம்

## பலாலி இராணுவ அதிகாரியிடம் விநாயகமூர்த்தி முறையீடு

யாழ்ப்பாணம், ஜன. 3

உசன், கைதடி ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ அதிகாரிகள் அங்குள்ள வீடுகளில் இருந்து தளபாடங்கள், கதவுகள் உட்பட பல பொருள்களை எடுத்து விற்பனை செய்வதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. விநாயகமூர்த்தி பலாலி தலைமையக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவிடம் முறையிட்டுள்ளார்,

இது தொடர்பாக மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவுக்கு அவர் அனுப்பிய கடிதத்தில்—

இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி உள்ளார்.

இருபாலையில் உள்ள இராணுவ சமையல் முகாம் பகுதியில் உள்ள வீடுகள் இடிக்கப்பட்டு மரப்பலகைகள், மரங்கள் எடுக்கப்பட்டு எரிப்பதற்குப் பயன்படுத்துவதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் விநாயகமூர்த்தி தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

மற்றும் யாழ்ப்பாண மீனவர்களின் பிரச்சினை, குருநகர் மீனவர்களின் குடியிருப்புப் பிரச்சினை ஆகியவை குறித்தும் தமிழ்க் காங்கிரஸ் எம். பி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

### மீன் பிடிக்க வசதி வேண்டும்

மீன்பிடித்தொழில் இரவு நேரத்திலும் ஆழ்கடலிலுமே செய்யமுடியும் என்றும்—

ஆகவே அதிகாலை 3.00 மணி தொடக்கம் மீன்பிடிக்க அனுமதிக்கும் படியும் மீன் பிடிக்கும் தூரத்தை 2 மைல்களாக அதிகரிக்கும் படியும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

குருநகரில் இராணுவப் பாதுகாப்பு வலயம் உள்ள பகுதிகளில் 400 வீடுகள் வரை உள்ளதாகவும் இந்த வீடுகளில் வசித்துவந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் –

அவர்கள் மீண்டும் தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது, (இ)

## தீவக வடக்குப் பிரதேச வழிபாட்டு அபி. ஒன்றியம்

தீவக வடக்கு பிரதேச வழிபாட்டு அபிவிருத்தி ஒன்றியம் கடந்த வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி பங்குத்தந்தை வண. யூட்நிக்சன் தலைவராகவும், எஸ். தேவராஜா செயலாளராகவும், கு. கணேசலிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்

இந்த ஒன்றியத்தின் ஊடாக ஆலயங்களுக்கான யாப்பு தயாரித்தல், ஆலயங்களை இந்து கலாசார அமைச்சில் பதிவு செய்தல்,சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைப்புச் செய்தல்,பூசை நடைபெறாத ஆலயங்களில் பூசைகள் நடைபெற ஒழுங்கு செய்தல், ஆலயங்களில் அறநெறிப்பாடசாலைகளை நடத்துதல் போன்றவற்றை உடன் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. (இ-'3

# உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு இடர்காலஊக்குவிப்புக் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜவ. 3

யாழ். மாவட்டத்திலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 1999 ஜூலை தொடக்கம் டிசெம்பர் வரையிலான ஆறுமாத காலப் பகுதிக்குரிய இடர்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இதுவரை இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்காத உள்ளூராட்சி மன்றங்கள் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் முன அனுமதியுடன் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, பளை, பருத்தித்துறை ஆகிய பிரதேச சபைகளில் கடமையாற்றிய ஊழியர்களுக்குக் கடந்த 29 ஆம் திகதி இக்காலப் பகுதிக்குரிய இடர்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவினைப் பெற்றுத்தருவதற்குச் செய்தியினை வெளியிட்டு உதவிய உதயன் பத்திரிகைக்கு நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக ஊழியர்கள் தெரிவித்தனர். (இ-117)

## பாதிக்கப்பட்ட சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு வங்கிக் கடன்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3

அண்மைக்கால யுத்த நடவடிக்கை காரணமாக சாவகச்சேரிப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் மீண்டும் அவர்களது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க இலகு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்கு—கிழக்கின் தமிழர் விவகாரம் மற்றும் இந்து காலசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார் என்று ஈ. பி. டி. பியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பிரதிநிதிகள் அமைச்சரை ஈ. பி. டி. பியின் யாழ். தலைமைச் செயலகத்தில் சந்தித்து இடம்பெயர்ந்த சாவகச்சேரி வர்த்தகர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகான உதவுமாறு கோரி இருந்தனர்.

இந்த சந்திப்பின் போது சாவகச்சேரிப் பிரதேசத்தில் மீளக் குடியமர நடவடிக்கை எடுக்கும்படியும் இந்த நடவடிக்கை காலதாமதமாகும் பட்சத்தில் யுத்த நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து வருகையில் விட்டு வந்த உடைமைகளை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடப்பட்டது

பாதிக்கப்பட்டசாவகச்சேரி வர்த்தாகளது தொழில் முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவியாக வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதியிலிருந்தும் நிதி வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

வங்கியிலிருந்து கடன்களைப் பெற்று தற்போது கடன் நிலுவைகளை மீளச் செலுத்த முடியாமல் கஷ்டப்படும் வர்த்தகர்களது கடன் நிலுவைகளையும் வட்டியையும இரத்துச் செய்ய அல்லது பிற்போட நடவடிக்கை எடுப்பதாகவும் இவற்றுக்குரியநடவடிக்கையின்பொருட்டுபாதிக்கப்பட்ட வர்த்தகர்களது விவரங்களை உடன் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் வர்த்தகப் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை வர்த்தகப்பிரதிநிதிகள் கடந்த யுத்த நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரி 287 வர்த்தகர்களது விவரங்களை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளனர். (இ)

## விலை ஏற, ஏற தேங்காய் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

குடாநாட்டில் தேஙகாய் விலை உயர, உயர தேங்காய்த் திருடர்களின் தொல்லையும் அதிகரித்து வருகிறது.

ஆனைக்கோட்டை, நவாலி மானிப்பாய், சங்குவேலிப் பகுதிகளில் தேங்காய்த் திருடர்கள் இரவு நேரம் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். ஆள்கள் இல்லாத வீடுகளிலேயே பெருமளவில் இந்தத் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன.

இதேவேளை அண்மையில் ஆனைக்கோட்டை. நவாலி வீதியில் உள்ள கடை ஒன்றில் கடை உரிமையாளர் கடைக்குப் பின்னால் நின்ற வேளை கண்ணாடிப் பெட்டியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாண் பெட்டியுடன் களவு போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-139)

## சமய சந்நிதியில்

தொண்டமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு தினசரிகாலை 5-30 மணி தொடக்கம் 6-30 மணி வரை ''திருவாதவூரடிகள் புராணப் படிப்பு'' நடைபெற்று வருகிறது. (ம—30)

# வாசகர் திருமுகம்

## பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு தந்தையின் வேண்டுகோள்!

பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடும் அன்பார்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களே!

''உப்பைத் தின்றவன் தண்ணி குடிப்பான் தப்பைச் செய்தவன் தண்டனை கொள்வான்''. இது ஓர் அர்த்தமுள்ள பாடலின் ஆரம்ப வரியாகும். இதனை நீங்கள் மனதில் கொள்ளுங்கள்- தப்பை மேற்கொண்டவர்களுக்கே பல்கலைக்கழக நிர்வாகம் தண்டனை கொடுத்துள்ளது. இது ஒரு வரவேற்கப்பட வேண்டிய நிர்வாக நடவடிக்கையாகும். இவ்வாறு நிர்வாக நடவடிக்கை எடுப்பதனால் இந்த ''ராகிங்'' அநாகரிகத்தை இம் மண்ணில் இருந்து களை எடுக்கலாம் என்பது திண்ணம்.

மேலும் எனது அன்பிற்குரிய பிள்ளைகளே! பரீட்சை எடுத்து 2 வருடங்கள் கழிந்த பின்னரே பல்கலைக்கழகம் வந்திருக்கின்றீர்கள். (தற்சமயம் இந் நிலை மாற்றப்பட்டு விட்டது) அத்துடன் இங்கு இடம் பெற்ற இடப்பெயர்வுகள். யுத்தங்களினால உங்கள் கல்வி எவ்வளவோ காலம் பின் தள்ளப்பட்டு விட்டது. அவற்றைவிட எத்தனை கஷ்டத்தின் மத்தியில் உங்களைக் கல்வி பயில்விக்கின்றோம் என்று எங்களுக்குத் தான் தெரியும்.

மேலைத்தேச நாடுகளில் 18 வயது வந்தவுடனேயே பிள்ளைகளை அவரவர் வழியில் விட்டு விடுகின்றனர்; அங்குள்ள எம் போன்ற பெற்றோர். ஆனால் இங்கு உங்களுக்கு 28 வயது வரை கல்வி பயில சகல வசதிகளும் நாமே செய்கின்றோம். எமது கஷ்டத்தினை உணர்ந்தேனும் நீங்கள் விரைவில் கல்வியை முடித்து பட்டதாரியாகித் தொழில் பார்க்க வேண்டாமா? சொந்தமாக உழைக்கவேண்டாமா?

நியாயத்திற்காகப் போராடுங்கள் தென்மராட்சி மக்கள் யுத்தச் சூழ்நிலையில் சிக்குண்ட சமயம் அவர்களை மீட்பதற்குப் போராடி வெற்றி கண்டீர்கள். விஞ்ஞான பீடத்தின் போதனை 6மாதங்கள் பிற்போடஇருந்த சமயம் அந்த நடவடிக்கையினை எதிர்த்து வெற்றி பெற்றீர்கள்.

இவற்றை யாம் மனதாரப் பாராட்டுகின்றோம். ஒருபோதும் அநீதிக்காகப் போராடாதீர்கள். இப்போது நீங்கள் பகிஷ்கரிப்பது தவறு செய்தவர்களைப் பாதுகாப்பதற்கு ஒப்பானதாகும்.

ஒரு மாணவனை அவன் மரண வாசலுக்குச் சென்று திரும்பும் அளவிற்குத் தாக்கியிருக்கின்றனர் ஏனைய மாணவர்கள் சிலர்.

இவர்களுக்குத் தண்டனை கொடுப்பது தவறா? இப்படியானவர்கள் உயர்கல்வி கற்றுப் பட்டம் பெற்றுச் சமூகத்துக்குள் நுழைந்து சமூகத்தை முன்னெடுத்துச் சென்றால் எமது எதிர்காலச் சமூகத்தின் ஒழுக்க நிலை கேலிக்குரியதாகிவிடும் ஒழுக்கம் குன்றிய நான்கு மாணவவர்களின் கல்விக்காக ஒழுக்கமுள்ள 4,000 மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவது நியாயமா? இவை யாவற்றையும தெளிவாகச் சிந்தித்துச் செயற்படுங்கள்.

சக பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை வகுப்புக்குச் செல்லும்படி வற்புறுத்துங்கள்.

அறிவுசார் விரிவுரையாளர்களே! நீங்கள் உங்கள் கடமைக்கு அமைவாக விரிவுரையாற்றுங்கள். நீங்களும் அநீதிக்கு உடந்தையாகிவிடாதீர்கள்.

அன்புள்ள பல்கலைக்கழக மாணவிகளே! உங்களுக்கு ''ராகிங்'' நடக்கும் சமயம், மூத்த மாணவர்கள் தூஷண வார்த்தைகளைச் சொல்லும்படி வற்புறுத்துகின்றனரே; வாய்மொழி மூலம் பாலியற் துஷ்பிரயோகம் செய்கின்றனரே என்று அப்போது கண்ணீர் விட்டீர்கள். இபபோது அதே கொடுமை அடுத்துவரும் தங்கள் அருமைத் தங்கைமாருக்கு ஏற்படுவதற்கு உடந்தையாக இருக்காதீர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்காதீர்கள். ஏனைய மாணவர்களே! எவரையும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு வற்புறுத்தாதீர்கள்.

மேலும் எந்த நாட்டிலும் அடித்தவனுக்கும் அடி வாங்கியவனுக்கும். கொலை செய்தவனுக்கும் கொல்லப்பட்டவனுக்கும், பணத்தைக் கொள்ளை அடித்தவனுக்கும் பணத்தைப் பறிகொடுத்தவனுக்கும் தண்டனை கொடுப்பது வழக்கமல்ல. ஆனால் யாழ் பல்கலைக்கழகத்தில் தாக்கியவனுக்கும் தாக்குண்டவனுக்கும் தண்டனை கொடுக்கபபட்டுள்ளது. இதைவிட நியாயத்தினைக் கேட்கவேண்டியவர்கள் மௌனமாக இருந்தசமயம் நியாயம் கேட்ட மாணவர்களைத் தண்டிப்பதும் அநீதியாகும்.

தற்போது நடைபெறும் பகிஷ்கரிப்பிற்குக் காரணம் மாணவர்கள் மட்டும் அல்ல என்றும் விரிவுரையாளர் ஒருவரும் இதன் பின்னணியில் உள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது காணாமற்போன மாணவனான கோணேஷ் விடுதலை தொடர்பாக நீங்கள் பகிஷ்கரிப்பு மேற்கொள்ள எத்தனித்த சமயம், மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், பாதுகாப்பு என்று காரணம் காட்டி அது மழுங்கடிக்கப்பட்டது ஆனால் குறிப்பிட்ட விரிவுரையாளர் இப்போது மைதானத்தில் வைத்துப் பகிரங்கமாக மாணவர்களைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு சொல்கிறார் எனவும் அறிகின்றோம். ஏனைய விரிவுரையாளர்கள் அவ்வாறு செயற்படவில்லை என்பதும் எமக்குத் தெரியும்.

ஒழுக்கத்துடன் இணைந்த கல்வியே உண்மையான கல்வி. கல்வியின் நோக்கமோ சமூகத்துக்குப் பெறுமதியானவர்களை உருவாக்குவதே. எனவே அன்பான பல்கலைக்கழகமாணவர்களே! எல்லோரது நன்மை கருதியும் வகுப்புப் பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு பெற்றோர் சார்பில் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்

ஏம் ரி. அரசன்

[ஒழுக்கத்தோடு இணைந்த கல்வியை நாடும் தந்தை]

யாழ்ப்பாணம்.

# இந்திய மாநில சுயாட்சியை ஒத்த ஒரு தீர்வே இலங்கைக்கு சிறந்தது

## ரணிலிடம் பால்தக்கரே தெரிவிப்பு

புதுடில்லி, ஜன. 3

இந்தியாவில் இருப்பது போன்ற மாநில சுயாட்சி முறையை உதாரணமாகக் கொண்டு அதே போன்ற சுயாட்சி முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கை இன நெருக்கடியைத் தீர்த்து வைக்க முடியும் என்று சிவசேனைத் தலைவர் பால்தக்கரே தெரிவித்துள்ளார்.

மும்பாயில் பால்தக்கரேயை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஞாயிறன்று சந்தித்துப் பேசினார். அச்சமயம் பால்தக்கரே தம்மிடம் இதனைத் தெரிவித்ததாக ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் அரசியல் நிலைவரம் தொடர்பாக இருதலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்க முடியாது எனவும் வடக்கு —கிழக்கு இன நெருக்கடிக்கு பிரிக்கப்படாத இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலின் மூலம் சுயாட்சி அதிகாரம் வழங்கப்படுவதே சிறந்த தீர்வாக அமைய முடியும் என்றும் பால்தக்கரே கூறியதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஐ)

## அவிசாவளை நீதிமன்றில் நேற்று துப்பாக்கிச் சூடு!

### சட்டத்தரணி உயிரிழந்தார்

கொழும்பு, ஜன. 3

அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கி சட்டத்தரணியான கே. எஸ். சட்டபெரும என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் மற்றுமொருவர் காயம் அடைந்தார்.

இந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக பொலிஸாரால் கூட்டி வரப்பட்ட ஒரு கைதியை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் —

எனினும் அந்தக் கைதி தப்பிவிட்டதாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் கடமையில் இருந்த ஐந்து பொலிஸார் வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-3)

## பஸ்ஸினுள் தவறி விழுந்த சிறுமி

யாழ்ப்பாணம்: ஜன. 3

வேகமாகச் சென்று கொண்டிருந்த பஸ் திடீரெனப் 'பிறேக்' போட்டபோது பஸ்ஸிற்குள் தவறி வீழ்ந்த சிறுமி ஒருத்தி கைமுறிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறீகாந்த் தாட்சாயினி [வயது 5] என்ற சிறுமிக்கே கை முறிந்தது. [ஐ-6]

## மணல் அள்ளுவதைத் தடுக்க பிரதேச சபை தீர்மானம்

வடமராட்சி கிழக்கு மணல் காட்டுப் பகுதியில் மணல் அகழப்பட்டு வாகனங்களில் ஏற்றப்படுவதைத் தடைசெய்யுமாறு இப்பகுதிமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இப்பகுதியில் மணல் ஏற்றுவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டுமென பருத்தித்துறை பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீ. ரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உபதலைவர் ப.இரவீந்திரன் மேற்படி பிரேரணையை முன்வைத்தார்.

மணல் காட்டுப் பகுதியில் மணல் அள்ளப்படுவதைத் தடைசெய்து அம்பன், குடத்தனைப் பகுதி மக்களுக்கு இடைஞ்சல் இல்லாத இடங்களில் மணல் அள்ளுவதற்கு அனுமதிப்பதென சபையால் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-117]

## 1570 அகதிகள் தமிழகம் வருகை

இராமேஸ்வரம், ஜன. 3

2000 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு மொத்தம் ஆயிரத்து 570 பேர் அகதிகளாக வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகுகளில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பெரும் தொகைப்பணத்தைக் கொடுத்தே இவர்கள் வந்து சேர்ந்ததாகவும் இவர்களில் பலர் பெண்களும் குழந்தைகளுமாவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## யுத்த நிறுத்தத்தை ஏற்பதில் அரசுக்கு என்ன நெருக்கடி?

### ஹரி குணதிலக கேள்வி

கொழும்பு, ஜன. 3

புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை சர்வதேச சமூகம் முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அரசு மட்டும் அதனை நிராகரிப்பது ஏன்?

ஒரு நிமிடத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபாவை விழுங்கி வரும் யுத்தத்தை நிறுத்துவதில் அரசுக்கு என்ன நெருக்கடி?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக.

கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கேள்விகளை எழுப்பினார்.

யுத்தத்தில் ஒரு போதும் வெற்றியீட்ட முடியாதுஎன்று கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருந்தேன்.

பல சந்தர்ப்பங்களில் இதனைச் சுட்டிக்காட்டியும் வந்துள்ளேன். படைத்தளபதிகள் கூட இன்று இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அமைச்சர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். வெளிநாட்டு அமைச்சர் மற்றும் பாதுகாப்பு பிரதி அமைச்சர்களிடையே கருத்துப் போர் நிலவுகிறது. இந்நிலையில் அரசு நல்ல முடிவை எடுத்து புலிகளுடன் பேசவேண்டும்— என்று ஹரி குணதிலக கூறியுள்ளார். (ஐ-20)

## யாழ். பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் எழுச்சி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். பல்கலைக்கழக சமூகத்தினரால் நடத்தப்பட்டு வரும் எழுச்சி நிகழ்வுகளின் தொடர்ச்சியாக நேற்றும் பல்கலைக்கழகத்தில் கூட்டங்கள் நடைபெற்றன.

இந்தக் கூட்டத்தில் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதேவேளை—

இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக நேற்று நுண்கலைப் பீடத்திலும் கூட்டம் நடைபெற்றது. இதில் நுண்கலைப் பீட மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கு பற்றியதாக மாணவப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

'தமிழ்மக்களின் அபிலாஷை சுய நிர்ணய உரிமையே' என்பதை வலியுறுத்தி பல்கலைக்கழகத்தில் இந்த எழுச்சி நிகழ்வுகள் கடந்த ஐந்துதினங்களாக நடைபெற்று வருவது தெரிந்ததே. (ஐ-6)

## சமுர்த்தி செயலணி அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் தென் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவில் சமுர்த்தி செயலணிக் குழு அமைக்கும் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் கலட்டி மெ. மி. த. கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். (ஐ-3)

## சாயிசமித்தியில் பாகவத படனம்

யாழ்ப்பாணம், ஜன. 3

திருநெல்வேலியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் இன்று புதன் கிழமை காலை 8-30 மணி முதல் பாகவதப்படனம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இந்நிகழ்ச்சிஅன்று நாராயண சேவையுடன் நிறைவுபெறும். [ஐ]

## எண்மரின்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மரண விசாரணைகளின் போது பதியப்பட்ட சாட்சியங்களிலிருந்தும் என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள், குறிப்புகள் என்பனவற்றிலிருந்தும் 26.12.2000ஆம் திகதிய வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை அறிக்கையிலிருந்தும் 19.12.2000 அன்று 'மிருசுவில் பாம்' என்ற இடத்தில் காணாமல்போய் பின்னர் 25.12.2000 அன்று அருகில் உள்ள காட்டுப் பகுதியொன்றில் புதைகுழி ஒன்றிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டவர்களது மரணமானது குறிப்பிட்டுக் கூறக்கூடிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அடி, சித்திரவதை, கூரிய ஆயுதத்தினால் ஏற்படுத்தப்பட்ட வெட்டுக் காயம், குருதி நாளங்கள் வெட்டப்பட்டமை என்பனவற்றினால்ஏற்பட்ட பெருந்த இரத்த விரயத்தினாலும் அதிர்ச்சி சோர்வினாலும் ஏற்பட்டதெனத் தீர்மானிக்கின்றேன். மேற்படி இறப்புக்களை பதிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றப் பதிவாளரைப் பணிக்கின்றேன்.

சாட்சியங்களிலிருந்து 19-12-2000க்குப் பின் முன்னான சம்பவத்தின் போது பாரிய குற்றங்கள் புரியப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படுவதால் அது தொடர்பில் குற்றவியல் நடைமுறைக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய அவசிய நடவடிக்கைகள் எடுத்து சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்வதுடன் தொடர் நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கோடிகாமம் பொலிஸாரைப் பணிக்கின்றேன்.

இவ்வாறு நீதிவான் தனது மரண விசாரணைத் தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

## மாணவர்கள் நால்வரும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். பல்கலைக்கழக புகுமுக மாணவன் ஜெகதீபனைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறி மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டிருந்த நான்கு சிரேஷ்ட மாணவர்களும் மீண்டும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு மாணவர்களும் தாம் செய்த தவறை உணர்ந்து தம்மிடம் வந்து மன்னிப்புக் கோரியதை அடுத்து அவர்களை இனிமேல் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த நான்கு மாணவர்களும் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-6-5)

## கல்விக்கல்லூரியின் வாகனம் கடத்தல்

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி பீடாதிபதியின் உத்தியோகபூர்வ வாகனம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அக்கரைப்பற்று — பொத்துவில் வீதியில் வைத்து இந்த வாகனம் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாகனக்கடத்தல் தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். [ஐ-3]

## இலவச சீருடை விநியோகம்

தென்மராட்சி, ஜன. 3

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் தென்மராட்சி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் மூலம் நாளைவியாழக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே யாழ். கல்வித் திணைக்களத்தினால்வழங்கப்பட்ட சீருடைத் துணிகள் வலிகாமம், வடமராட்சி பகுதி பாடசாலைகளில் உள்ளதென்மராட்சி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## விபத்தில் ஆசிரியர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். நல்லூர் நவீன சந்தைப் பகுதியில் நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் —சைக்கிள் விபத்தில் இக்கி யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் ஒருவர் தலையில் காயமடைந்தார்.

பருத்தித்துறை வீதி நல்லூரைச் சேர்ந்த விஸ்வநாதர் குருநாதர் (வயது-50) என்ற ஆசிரியரே சைக்கிளில் வந்த போது விபத்துக் குள்ளாகி காயமடைந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-6)

## படையினரின் இணைய...

[முதலாம் பக்கத்தொடர்ச்சி] பி.பி.சி. தெரிவித்தது.

முன்னரும் இலங்கை அரசின் இணையத் தளம் ஒன்று, புலிகளின் சைபர் தாக்குதலுக்கு இலக்காகிச் செயலிழக்கச் செய்யப்பட்டதைச் சுட்டிக் காட்டிய இராணுவ அதிகாரி ஒருவர், விடுதலைப் புலிகள் மீண்டும் அவ்வாறான செயலைச் செய்திருப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்த இணையத் தளத்துடன் தொடர்பு ஏற்படுத்த முடியாத நிலை இருந்தபோதிலும் நேற்று அந்த இணையத் தளத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் முழுமூரமாக மேற்கொண்டு வரும் பிரசாரப் போருக்கு ஈடுகொடுக்கும் நோக்கத்துடன் இராணுவம் இந்தப் புதிய இணையத் தளத்தை ஆரம்பித்துள்ளது என்று அவதானிகள் தெரிவித்தனர்.


பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு, இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும்என் னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி

அடியாள்.

[82470]

### தலைநகர் புதுடில்லி உட்பட

# இந்தியாவின் வடக்குப் பிராந்தியம்

# மின்சாரத் தடையால் ஸ்தம்பிதம்!

## தீவிரவாதச் சதி எனச் சந்தேகம்!!

புதுடில்லி, ஜனவரி 3

இந்தியத் தலைநகர் உட்பட வடக்குப் பிராந்தியம் முழுவதும் நேற்று அதிகாலை முதல் ஏற்பட்டுள்ள மின்சாரத்தடையால் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

மின்சாரத் தடைக்கு தீவிரவாதிகளின் சதிச் செயல்காரணமா என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மீண்டும் மின்சாரத் தொடர்பை ஏற்படுத்த முழு வீச்சில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கான்பூர் அருகே பன்றில் என்ற பகுதியில் உள்ள இரு மின்சாரத் தொடர்புக் கோபுரங்களுக்கு இடையேயான இணைப்பில் மின்சாரக் கசிவு ஏற்பட்டதாலேயே மின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மின்சாரத் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் வடக்கில் சங்கராலி முதல் காஷ்மீர் வரையிலான வடபிராந்தியம் முழுவதிலும் பெரிய அளவில் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது.

தலைநகர் புதுடில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகை, பிரதமர் அலுவலகம் போன்ற மிக, மிக முக்கிய மானவர்கள் வசிக்கும் பகுதிகளில் மின்சாரம் இல்லை. இப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மின்சாரத் தடையால் இப் பிராந்தியத்தில் ரயில் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

டில்லி, ஹரியானா, பஞ்சாப், காஷ்மீர் ஆகிய மாநிலங்கள் மின்சாரத் தடையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாநிலங்களில் வங்கிகள், மருத்துவமனைகள் உட்பட முக்கிய இடங்கள் பலவற்றிலும் பணிகள் சீர்குலைந்துள்ளன.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு எரிவாயு இயந்திரங்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து வழங்க முயற்சி எடுத்து வருவதாக மின்சாரப் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மின்சாரத் துண்டிப்புக்கு மின்சாரக் கசிவே காரணம் என்றுகூறப்பட்டாலும், தீவிரவாதிகளின் சதிச் செயல் குறித்தும் மறுப்பதற்கில்லை என்று தெரிவித்த பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் —

மின்தடை உண்டானதற்கான காரணத்தை அறிய விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல்

காஷ்மீரில் உதம்பூர் மாவட்டத்தில் தீவிரவாதிகள் தாக்கியதில் இந்திய சிறப்புக் காவல் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்; இருவர் காயமடைந்தனர்.

ஜம்மு-ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் லாரி ஒன்றை நிறுத்த இந்திய வீரர்கள் முயன்றபோது அதில் இருந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

## புத்தாண்டிலும் காஸாவில் மோதல்கள்

காஸா, ஜன. 3

இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் மேற்குக் கரைப் பகுதியில் புத்தாண்டு பிறந்த இரவில் கடும் மோதல்கள் இடம்பெற்றன. அவற்றில் 4 பேர் உயிரிழந்தனர்.

காஸாவின் நுல்ஹாராமில் இஸ்ரேலிய ராணுவத்தினர் 2 பலஸ்தீனப் பொலிஸாரைச் சுட்டுக் கொன்றனர்.

இதற்கிடையில், யசீர் அராபாத்தின் 'பதாஹ்' இயக்க மூத்த உறுப்பினர் கொல்லப்பட்டதையடுத்து பாலஸ்தீனர்களின் பழிவாங்குதலுக்கு அஞ்சி யூதக்குடியிருப்பாளர்கள் பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து வெளியேறுவதாக கூறப்படுகிறது.

## அஸாமில் கடையடைப்பு

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் நேற்று கடையடைப்புக் காரணமாக இயல்பு வாழ்க்கைபாதிப்படைந்தது.

ரோமா நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 8 பிற மாநிலத்தவர்கள் அஸாமியத் தீவிரவாதிகளால் வெட்டிக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்படி கடையடைப்பு நடத்தப்பட்டது.

### உலக அரங்கில்

## குரியத் குழு பாகிஸ்தான் பயணம்

எதிர்வரும் 15 ஆம் திகதி பாகிஸ்தான் சென்று அங்குள்ள காஷ்மீர்த் தீவிரவாதத் தலைவர்கள் மற்றும் ராணுவ அரசுடன் காஷ்மீர்ப் பிரச்சினை குறித்துபேச்சுநடத்தப் போவதாகக் குரியத் மாநாடு கட்சி அறிவித்துள்ளது.

24 தீவிரவாத இயக்கங்களின் கூட்டமைப்பான குரியத் மாநாடு கட்சியனருக்கு கடந்த வாரம் கடவுச் சீட்டு வழங்க இந்திய அரசு முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

## தன்னால் கொல்லப்பட்டவரின் சடலத்தை பாதுகாக்கும் யானை!

சௌகாத்தி, ஜன. 3

தன்னால் கொல்லப்பட்ட ஒருவரின் சடலத்தை யானை ஒன்று கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வருவதாக இந்தியாவின் அசாம் மாநில வனப்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டுக்குள் பிரமாண்டமான மரம் ஒன்றின் கிளைகளுக்கு இடையே வீடு அமைத்து காட்டுவாசி ஒருவர் வாழ்ந்து வந்தார்.

இவர் குடியிருந்த மரத்தின் அடியில் வந்து நின்ற யானை ஒன்று, மரத்தைத் துதிக்கையால் பிடித்து உலுக்கியது.

இதனால் அந்தக் காட்டுவாசி மரத்திலிருந்து தவறி நிலத்தில் விழுந்து உயிரிழந்தார்.

இவரது மரணத்துக்கு தனது செயலே காரணம் என்று உணர்ந்து கொண்ட யானை அருகில் இருந்த ஆற்றில் காட்டுவாசியின் சடலத்தை நீராட்டி, கரையில் கிடத்திப் பாதுகாத்து வருகிறது.

எவரையும் சடலத்தின் அருகில் நெருங்க விடாமல் யானை விரட்டுவதாகவும், கடந்த இருவாரகாலமாக இந்த நிலை தொடர்வதால் சடலத்தை அப்புறப்படுத்த முடியவில்லை என்றும் வனப்பாதுகாவல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மேற்காசிய அமைதி குறித்து அதிபர் கிளின்ரன் எச்சரிக்கை!

வாஷிங்ரன், ஜன. 3



எதிர் வரும் 20 ஆம் திகதி அதிபர் பதவியிலிருந்து தான் விலகிய பின்னர் மேற்காசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் அமைதித் திட்டங்கள் விவாதிக்கப்பட மாட்டாது என்று அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் எச்சரிக்கை விடுத்தார்.

மேற்காசிய பிரச்சினைக்கு தீர்வு காண வழி செய்யும் சில பரிந்துரைகளை கிளின்ரன் இஸ்ரேலிய, பலஸ்தீனத் தரப்பினரிடம் சமீபத்தில் வழங்கியிருந்தார்.

அந்தப் பரிந்துரைகளை பலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர்.

பலஸ்தீனர்கள் பரிந்துரைகளை ஏற்றால் மட்டுமே தானும் ஏற்கப் போவதாக இஸ்ரேல் நழுவிக்கொண்டது.

பதவியில் இருந்து விலகுவதற்குள் மேற்காசியப் பிரச்சினையில் தீர்வு ஏற்படுத்த விரும்பிய கிளின்ரன், தனது பரிந்துரைகளை இருதரப்பும் அலட்சியப் படுத்தியுள்ளதால் விசனமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதனாலேயே தனது பதவிக் காலத்தில் அல்லது, பின்னர் தீர்வு காண முடியாது என்று கிளின்ரன் எச்சரித்துள்ளதாகக் கருதப்படுகிறது.

(ஒ-6)

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 5 நாடுகளுக்கு அங்கத்துவம்

நியூயோர்க், ஜன. 3

ஐ.நா. பாதுகாப்புச்சபையில் 5 நாடுகள் தற்காலிக உறுப்பு நாடுகளாக நியமிக்கப்பட்டுள்ளன.

அயர்லாந்து, நோர்வே, சிங்கப்பூர், மொரீஷியஸ் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளே, பாதுகாப்புச் சபையில் அடுத்து வரும் 2 ஆண்டுகளுக்கு அங்கத்துவம் பெற்றுள்ளன.

15 நாடுகள் அங்கம் வகிக்கும் பாதுகாப்புச் சபையில் சுழற்சி முறையில் வரும் தலைமைப் பதவியை சிங்கப்பூர் பெற்றுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகியவை நிரந்தர உறுப்பு நாடுகளாகும்.

10 நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகளில் ஆண்டு தோறும், 5 நாடுகள் பதவி விலக புதிதாக வேறு 5 நாடுகள் இருவருட அங்கத்துவம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-6)

### அணுசக்தி நிலையங்கள் தொடர்பாக

## இந்தியாவும் பாகிஸ்தானும் முக்கிய ஆவணங்கள் பரிமாற்றம்

புதுடில்லி, ஜன. 3

அணுசக்தி நிலையங்களைப் பட்டியலிட்ட ஆவணங்களை இந்தியாவும், பாகிஸ்தானும் பரிமாறிக் கொண்டுள்ளன.

இரு நாடுகளின் தலைவர்களும் கையெழுத்திட்ட தாக்குதல் தடை ஒப்பந்தத்தின்படியே இந்த ஆவணப் பரிமாற்றம் இடம்பெற்றதாக இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அணுசக்தி நிலையங்களின் மீது பரஸ்பரம் இரு நாடுகளும் தாக்குதல் நடத்துவதை மேற்படி ஒப்பந்தம் தடை செய்வதாகக் கூறிய அந்த அதிகாரி 1991 ஆம் ஆண்டு முதல் இது நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

இரு நாடுகளிலும் உள்ள அணுசக்தி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அவற்றில் சேதம் ஏற்பட்டால் பாதிப்படையக்கூடிய பகுதிகள் உட்படப் பல விவரங்கள் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-6)

## சீனா-தைவான் இடையே கப்பல் போக்குவரத்து

### 50 ஆண்டுகளின் பின்னர் ஆரம்பித்தது

தைபே, ஜன. 3

சீனாவுக்கும் தைவானுக்கும் இடையே 50 ஆண்டுகளின்பின்னர் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்குமிடையேயான பிணக்கையும், பதற்ற நிலையையும் தணிக்கும் முயற்சியாகவே இந்தக் கப்பல் போக்குவரத்துத்தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தைவானின் கியூமோத் துறைமுகத்திலிருந்து சீனக் கடலோர நகரான ஜியாமென்னுக்கு நேற்று போக்குவரத்தில் ஈடுபடும் முதல் கப்பல் புறப்பட்டுச் சென்றது.

1949 ஆம் ஆண்டு சீனாவில் இருந்து மாசேதுங்கின் கம்யூனிசச் செம்படையால் விரட்டியடிக்கப்பட்ட சர்வாதிகாரி சியாங்கை ஷேக்கும், அவரது படைகளும் அப்போது சீனாவின் ஒரு பகுதியாக இருந்த 'போர்மோசா' என்ற தீவில் தஞ்சமடைந்தனர்

பின்னர் அமெரிக்காவின் ஆதரவுடன் சியாங்கை ஷேக் தரப்பினர் அத்தீவை தைவான் என்று தனி நாடாகப் பிரகடனம் செய்தனர்.

சீனாவுடனான தபால், வர்த்தக, போக்குவரத்துத் தொடர்புகளையும் தைவான் துண்டித்துக்கொண்டது.

அமெரிக்காவின் வற்புறுத்தலால் தைவானையே தேசிய சீனாவாக ஐ.நா. சபை அங்கீகரித்திருந்தது.

70 களின் தொடக்கத்தில் மாசேதுங் தலைமையில் வளர்ச்சியடைந்த வல்லரசாகச் சீனா மாறி விட்டதால் தைவானுக்கு வழங்கி வந்த ஆதரவை அமெரிக்கா விலக்கிக் கொண்டது.

ஐ.நாவும் சீனாவாக மாசேதுங் தலைமையிலான நாட்டை அங்கீகரித்தது.

அன்றிலிருந்து, தைவான் சீனாவின் ஒரு பகுதி என்று சீன அரசு வலியுறுத்தி வருகிறது.

ஆனால் இதனை மறுத்து சுதந்திரத் தனி நாடாகவே தொடர்ந்து இருக்கப்போவதாகத் தைவான் கூறி வருகிறது

இதனால் இரு நாடுகளிடையேயும் பனிப்போர் தொடர்கிறது.

பனிப்போரைத் தணிக்கும் முயற்சியாகவே தற்போது தைவான் அரசு சீனாவுடன் தொடர்புகளை ஏற்படுத்த முன் வந்துள்ளதாகக் கருதப்படுகிறது. [ஒ-6]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தும்பளை பருத்தித்துறையில் பிறந்து
தும்பளை நெல்லண்டை
பத்திரகாளி அம்மன் கோயில் தருமபரிபாலன சபை,
தும்பளை கிழக்கு சனசமூகநிலையம்
என்பவற்றில் அங்கத்துவம் வகித்து
ஊரின் வளர்ச்சிக்கு பெரிதும்
பங்காற்றிக்கொண்டிருக்கும்

யாழ்ப்பாணம், மல்லாகம் மாவட்ட நீதிவான்

**திரு. பா. சுப்பிரமணியம்** அவர்களையும்
சமாதான நீதிவானும் உத்தியோகப் பற்றற்ற நீதிவானுமாகிய (J. P U. M)

**திரு. சபா. இரவீந்திரன்** அவர்களையும்
சமாதான நீதிவான் (J. P,)

**திரு. வி. சேதுநாயகம்** அவர்களையும்

மேற்படி பதவி உயர்வு கிடைத்ததையிட்டு
இப்புத்தாண்டில் மனமார வாழ்த்துகின்றோம்.

**தும்பளை இளைஞர்கள்,**
**பொதுமக்கள்.**

தும்பளை, பருத்தித்துறை. (82447)

---

## நெஞ்சம் கலங்கி நிற்கும் ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 — 10 — 1948

மறைவு 17 — 12 — 1999

### அமரர் மருதடியான் நாகராசா
(ஸ்ரீலங்கன் றெலிகொம், யாழ்ப்பாணம்)

திதி: 03 — 01 — 2001

பிரிவால் துயருறும்:

மனைவி: **மங்கையர்க்கரசி,**
பிள்ளைகள்: **தயாளினி, தயாளன், தயாகரன், தயாறூபன்.**

சந்தரோடை,
சுன்னாகம். (82438)

---

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



### அமரர் நரசிங்கம் பொன்னுத்துரை

02 - 12 - 2000 அன்று இயற்கை எய்திய எமது குடும்ப விளக்கு நரசிங்கம் பொன்னுத்துரை அவர்களின் இறுதி யாத்திரையின் போது உடனிருந்தவர்களுக்கும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் இரங்கலுரை நிகழ்த்திய அறிஞர்களுக்கும் தொடர்ந்து எமது இல்லத்துக்கு வந்து துயர்பகிர்ந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (03—01—2001) புதன் கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மைத்துனர்,**
**மருமக்கள், பெறாமக்கள்.**

கம்பலை வளவு,
பன்னாலை,
தெல்லிப்பழை. (82412)

---

## காயம்

யாழ்ப்பாணம், ஜன. 3

அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற பஸ் — மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் காயமடைந்துள்ளார்.

வேலணையைச் சேர்ந்த சண்முகநாதன் உதயச்சந்திரன் (வயது 31) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ—5—15)

## கணனி செயற்பாட்டறை திறந்துவைப்பு

வலி. தென்மேற்கு, ஜன. 3

மானிப்பாய்- வலி. தென்மேற்கு பிரதேச சபையில் நேற்று முன்தினம் புதிய கணனி செயற்பாட்டறை திறந்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராக மானிப்பாய்த் தொகுதி ஈ. பி. டி. பி. அமைப்பாளர் வெலிச்சோர்அன்ரன் ஜோன்சன் கலந்து கொண்டு புதிய கணனி செயற்பாட்டறையைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச சபைச் செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர், பொறுப்பதிகாரிகள் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (இ-185)

## ஓய்வு பெறுகிறார்

மானிப்பாய், ஜன. 3

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரான்பற்று கிராம சேவகர் சண்முகம் சிவகுமாரன் இன்றுஓய்வு பெறுகிறார். இவரது இடத்துக்கு இ. நித்தியானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ—90)

## நாய்களுக்கு நஞ்சூட்டும் திருடர்கள்

வளர்ப்பு நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்படும் சம்பவங்கள் மானிப்பாயில் இடம்பெற்று வருகின்றன.

கடை உரிமையாளர்களது நாய்களே இவ்வாறு கொல்லப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இது இரவுத் திருடர்களது செயலெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-90)

## வயலில் பசளை வீசியவர் மரணம்

மானிப்பாய், ஜன. 3

வயலில் பசளை வீசிக்கொண்டிருந்தவர் திடீர் அதிர்ச்சியால் வயல் நீருக்குள் வீழ்ந்து மரணமானார்.

வயல் வரம்பில் பாம்பு ஒன்றைக் கண்ட அதிர்ச்சியால் இருதய பாதிப்புற்று அவர் இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் டச்சு வீதியைச் சேர்ந்த விவசாயி கதிரவேல் விஜயரத்தினம் (45 வயது) என்பவரே இறந்தவர் ஆவார். (இ-90)

## திருவெம்பாவை பஜனை

கொழும்புத்துறை, ஜன. 3

வட்டுக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விசுவநாத சிவன் கோயிலில் இருந்து அதிகாலை 5 மணிக்கு வட்டுக்கோட்டை காந்தி சனசமூக நிலைய இளைஞர்கள் தினசரி திருவெம்பாவை வீதிப்பஜனையை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர்.

இப் பஜனைக் கோஷ்டியினர் அப்பகுதி வீதிகள் தோறும் வலம் வந்து காலை 6.30 மணிக்கு வட்டுக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு வந்து இந்த வீதிப் பஜனையை நிறைவு செய்கின்றனர். (இ—30)

---

## பஸ் சேவையை அறியத் தருகின்றோம்

யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, யா/ இந்து ஆரம்ப பாடசாலை, புனித. ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ் பரி. யோவான் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களுக்காகப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட 764 தனியார் பாடசாலைச் சேவை மினிபஸ் (இல. 33 சிறீ 8120) மீண்டும் புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, உரும்பிராய், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய பாதைகளூடாகச் சேவையில் ஈடுபடும் என்பதை அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:

**வரதன்ஸ் தொலைத் தொடர்பு நிலையம்,**
**புன்னாலைக்கட்டுவன்.**
தொ. இல. 070- 212285
070- 212385

(82468)

---

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 — 09 — 1974

உதிர்வு 14 — 01 — 2000

### முதலி பகீரதன்
(நகரசபை அலுவலக உதவியாளர், பருத்தித்துறை)

திதி: 03—01—2001

மின்னாமல் இடிவிழுந்த விதமே போல
மிகவருத்தம் கொள்ள எம்மை விட்டே மெல்ல
பொன்னான உடல் நீத்துப் போய் விட்டாய் நீ
பன்னரிய சகோதரனே பாசமுள்ள அன்புருவே!
நித்திரையும் எமக்கில்லை நின் பிரிவை
— எண்ணியெண்ணி
நின்னையினி எப்போது காண்போமையா!

உன் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (82451)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 — 08 — 1912

உதிர்வு 10 — 12 — 1999

### அமரர் கதிராமு நாகமுத்து
[மயிலு — அச்செழு]

திதி: 03-01-2001

குடும்பத்தின் ஒளி விளக்காய்ப், பாசத்தின் உறைவிடமாய் இருந்து எம்மை வழி நடத்திய அன்புத் தெய்வமே! காலங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

ஓம் சாந்தி!

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார்,**
**உறவினர், நண்பர்கள்.**

தகவல்:
நா. குலசிங்கம் (மகன்)
இயந்திர இயக்குநர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

(82433)

# கைதடி, நாவற்குழிப் பகுதிகளுக்கு அரச அதிகாரிகள் குழு செல்லும்

யாழ்ப்பாணம்,ஜன.3

கைதடி, நாவற்குழி, நுணாவில் பகுதிகளுக்கு அரச அதிகாரிகள் அடுத்த சில தினங்களில் அழைத்துச் செல்லப்பட இருப்பதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள இந்தப் பிரதேசத்தில் சுமார் 68 குடும்பங்கள் வரைவசித்து வருவதாகவும் அக்குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காகவே அரச அதிகாரிகள் மற்றும் கிராம அலுவலர்கள் அடங்கிய குழுவை அங்கு அழைத்துச்செல்ல படைத்தரப்பில் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் அறியவந்தது.

கைதடி ப.நோ.கூ.சங்கம் ஊடாக இக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு தென்மராட்சி பிரதேச செயலருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது.

68 குடும்பங்களுக்கும் தேவையான உலர்உணவுப் பொருள்களுடன் அதிகாரிகள் குழு ஒன்று நாளை வியாழக்கிழமை கோப்பாய் - கைதடி வீதியூடாக மேற்படி பகுதிகளுக்குச் செல்ல இருப்பதாகவும் தெரியவந்தது. (ஐ-133)

# யுத்த நிறுத்தம் குறித்து இன்று ஆராயப்படமாட்டாதாம்!

## பிரதமர் ரத்னசிறி தகவல்

விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் தொடர்பாக இன்று இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படமாட்டாது என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தத்துக்குப் பதிலாக இலங்கை அரசாங்கமும் யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் என்று சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்ற வேளையில், அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் இல்லை.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் யுத்த நிறுத்தம் குறித்து பரிசீலிக்கப்படமாட்டாது -

என்று அப்பேட்டியில் கூறியுள்ளார் பிரதமர். (ஐ-3)

# குடும்பப் பதிவு அட்டைகள் யாழ். நகரில் மீளாய்வு

யாழ்ப்பாணம், 512 ஆவது பிரிகேட்பிரிவுக்கு உட்பட்ட பொதுமககள இந்த வருடத்திற்கான தமது குடும்பப்பதிவு அட்டைகளை மீளாய்வு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரியகுளம் சந்தியிலுள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் இந்தப் பணிகளை மேற்கொள்ளலாம் எனப் பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கிராம சேவையாளரின் சிபார்சுடன் இந்த அட்டைகளைச் சமர்ப்பிக்குமபடி கேட்கப்பட்டுள்ளது.

படையினரின் தேடுதல்களின்போது இந்தப் பதிவு அட்டைகள் பரிசீலிக்கப்படும் என்பதால காலதாமதமின்றி புதிய அட்டையைப் பெறுமாறு பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-3)



வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வல்வை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் கல்லூரி அதிபர் செ.யோகச்சந்திரன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (ஐ)


## வாழ்த்துகின்றோம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள்

**உயர்திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**

**உயர்திரு.M.மருதலிங்கம்**

ஆகியோர்களை மேலும் பணி சிறக்க மனமார வாழ்த்துகின்றோம்.

சு.சண்முககுலகுமாரன் (அதிபர்)
ஏ.சி.சண்முகலிங்கம் (உபஅதிபர்)

யா/சங்குவேலி அ.த.க.பா,
மானிப்பாய். (82486)



## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## VACANCY

**POST OF LEGAL OFFICER (ON CONTRACT)**

University of Jaffna will entertain applications from suitably qualified persons up to 31.01.2001, for the above mentioned post.

| | |
|---|---|
| Remuneration | : Rs.10,550/= (fixed) p.m. |
| Other Benefits | : Contributions to University Provident Fund and ETF |
| Terms of Employment | : Contract Basis, Renewable annually |
| Qualifications | : Attorney - at-law OR Bachelor's Degree in the field of law |
| Experience | : Post Qualifying Experience in the following Functions: (i) Drafting Of agreements and deeds (ii) Preparation of Title Reports, Drafting Plaint against defaulters (iii) Work related to debt recoveries (iv) Should have experience in court Work |
| Professional Competencies | : (i) Ability to handle all legal matters (ii) High proficiency in written and spoken in English |

Application Forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishment (Non-Academic), University of Jaffna Sri lanka either in person or by sending a money order/postal order for Rs.20/- per form. Those Who wish to obtain application forms by post are requested to send a money order/postal order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope of 23X10 cm. in size.

Applications received after the closing date will be rejected without intimation.

**VICE - CHANCELLOR**
University of Jaffna,
Jaffna. 2001.01.02. (C/1461.2)


## பிரதிஷ்டை ஆராதனை

யாழ்ப்பாணம்,ஜன.3

மானிப்பாயில் புதிதாக அமைக்கப்பட்ட கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலய கட்டடப் பிரதிஷ்டை ஆராதனை இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

வடலியடைப்பு - உடுவில் வீதியில் உள்ள இந்த ஆலய பிரதிஷ்டை நிகழ்வில் கல்வாரி பூரண சுவிசேஷ சபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சபையின் மேய்ப்பர் அறிவித்துள்ளார். (ம-6)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வுகள்

கொழும்புத்துறை,ஜன.3

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பேரவையின் தலைவர் சி. நாகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கான அறிமுகவுரையை சி.கந்தசாமி நிகழ்த்துவார்.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ம-30)


## எமது ஒரிஜினல் சண் டிஜிரல் வெளியீடுகள்

- ★ இது நம்ம பூமி
- ★ கட்டப் பொம்மன்
- ★ சேனாதிபதி
- ★ விக்னேஷ்வர்
- ★ வறுமையின் நிறம் சிவப்பு
- ★ வேடன்
- ★ தில்லு முல்லு
- ★ நினைத்ததை முடிப்பவன்
- ★ தர்மதேவதை
- ★ துலாபாரம்
- ★ நல்லவனுக்கு நல்லவன்
- ★ அவசரப் பொலீஸ் 100
- ★ மௌனராகம்
- ★ ஆசை
- ★ திருமூர்த்தி
- ★ கொடிபறக்குது
- ★ கரகாட்டக்காரன்
- ★ பலே பாண்டியா
- ★ உழைப்பாளி
- ★ நெஞ்சில் ஓர் ஆலயம்
- ★ காதல் ஓவியம்
- ★ தாவணிக் கனவுகள்
- ★ முறைமாமன்
- ★ திரிசூலம்
- ★ கருமேடு கருவாயன்

(82464)

**அருண் வீடியோ மூவி**
நெல்லியடி
Telephone No.:- 070 - 212801



## விஞ்ஞானபீடம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

விஞ்ஞானபீட விரிவுரைகளும் இதர செயற்பாடுகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதைச் சகல மாணவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

- விஞ்ஞான பீடாதிபதி.

(82488)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பி அமிர்தவல்லி

(நுணாவில் மத்தி, சாவகச்சேரி)

நுணாவில் - மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி அமிர்தவல்லி அவர்கள் நேற்று (02.01.2001) செவ்வாய் பிற்பகல் 3.45 மணியளவில் சுழிபுரத்தில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதர் சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும் இராமச்சந்திரன் (நிதி உதவியாளர் - பிரதேச செயலகம், சாவகச்சேரி) அவர்களின் அன்புத் தாயாரும் திருமதி சாரதாதேவி இராமச்சந்திரன் அவர்களின் அன்பு மாமியாரும் சயந்தன் (கணிய அளவையாளர் - கட்டார்), சகிதா (யாழ்.பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானபீட 3ஆம் வருடம்) சார்நிதா (பேராதனைப் பல்கலைக்கழக - விலங்கு மருத்துவபீட 2ஆம் வருடம்) சர்மிளா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி - விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற கோவிந்தர் பரமசாமியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.01.2001) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுழிபுரம் மேற்கிலுள்ள அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

*"கிருஷ்ணவாசா",*
*பாரதி கலைமன்ற அருகில்*
*(காழுவன் சந்தி),*
*சுழிபுரம் மேற்கு.*

தகவல்:
**சி.இராமச்சந்திரன்** (மகன்)

(82493)

## நாகமணி தவச்செல்வம்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தவச்செல்வம் 31.12.2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும் சாருமதி, குமுதினி (உபதபால் அதிபர் - சரவணை), முகுந்தன் (கலைப்பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற யதுகுலசிங்கம், மதியாபரணம், கருணானந்தசிவம், பரராஜசிங்கம், பராசக்தி, சரோஜினிதேவி, வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் பாக்கிய சிந்தாமணி, காலஞ்சென்ற சிவராசா மற்றும் பரம்சோதி (சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்.), சரோஜினிதேவி, கமலாஜினி, தனலட்சுமி, அற்புதராணி, காலஞ்சென்றவர்களான கையிலாசபிள்ளை, சிவஞானம் மற்றும் பத்மலிங்கம் (தபாலகம் - புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நேற்று (02.01.2001) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29, புதிய வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.* (82490)

தகவல்:
**த.முகுந்தன்** (மகன்)

# பளை மற்றும் ஆனையிறவை மீட்கும்வரை படை நடவடிக்கையைத் தொடர முடிவு!

கொழும்பு,ஜன.3

விடுதலைப் புலிகள் வசமுள்ள பளைப் பிரதேசம் மற்றும் ஆனையிறவுப் பகுதிகளைக் கைப்பற்றும்வரை தற்போதைய இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகி உள்ளன.

இராணுவ நடவடிக்கைகளில் படையினர் ஈட்டிவரும் வெற்றிகளை அடுத்து குடாநாட்டிலிருந்து விடுதலைப் புலிகளை முற்றாக ஓரங்கட்டிவிட முடியும் என்று படைத் தலைமை நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தை ஏற்று இலங்கை அரசாங்கமும் யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் என்று சர்வதேச அழுத்தம் அதிகரித்து வரும் இந்த நேரத்தில் -

யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு இணங்க முன்னர் ஆனையிறவை மீளக் கைப்பற்றுவதற்கு படையினர் சித்தமாக இருப்பதால் அதற்காக அவர்களுக்கு கால அவகாசம் ஒன்று வழங்கலாம் என்ற நிலையில் அரசுத் தரப்பு உள்ளதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் முதல் சாவகச்சேரி வரையிலான பிரதேசத்தை படையினர் தற்சமயம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.

கொடிகாமம், எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகள் ஏற்கனவே படையினர் வசமுள்ளன. இதன் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து எழுதுமட்டுவாழ்வரை படையினர் போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் அடுத்து ஆனையிறவு, பளை ஆகிய பகுதிகளையே படையினர் கைப்பற்ற வேண்டியுள்ளது.

இந்தப் பகுதிகளை மீட்கக் கூடிய பலமான நிலையில் படையினர் தற்சமயம் இருப்பதாக உயர் படை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.படையினருக்கு மேலும் அவகாசம் வழங்கி அந்தப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர அரசு விரும்புகிறது - என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-3)

## வர்த்தகர் சங்கக் கூட்டம்

மீசாலை கைத்தொழில் வர்த்தக சங்க அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை வியாழக் கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி கிழக்கு கிழவித் தோட்ட பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் க.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த பொதுக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராக மீசாலை கிழக்கு கிராம அலுவலர் நா.பரமசிவம் கலந்து கொள்வார்.

இடம்பெயர்வுகளாலும், யுத்தத்தினாலும் வணிக நிலையங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக இந்த பொதுக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (இ-ம-6-117)

## இந்துருவலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததை அடுத்தே அந் நிறுவனம் கப்பல் கட்டணத்தைக் குறைக்க இணங்கியது.

யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் பொருள்களை ஏற்றும் வணிகர் கழகத்தின் தலைவர் எம்.குணரத்தினம் நேற்றுக் கொழும்பில் இத்தகவல்களை வெளியிட்டார். (ஐ-3)

## நிபந்தனையுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நிபந்தனையின் அடிப்படையில் யுத்தநிறுத்தத்தை அறிவித்து அக் காலப்பகுதிக்குள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும் -

நோர்வே அரசின் உதவியுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்பை எந்த வகையில் பெற்றுக்கொள்வது என்பது தொடர்பாகவும் அமைச்சர்களுடன் ஜனாதிபதி ஆலோசித்ததாக அறியவந்தது.

யுத்தநிறுத்தத்துக்கான அரசின் நிபந்தனைகள் தொடர்பாக நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டபோதும் அவை தொடர்பான விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-3)


SUBRA (14)
சித்தன்கேணி
தரம் 4 முதல் O/L வரை
பிரிவு ii
ஆரம்பம் :- 05.01.2001
Sci. - இரா.செல்வவடிவேல், சுதாகர், நளாயினி
Mat. - கனேந்திரன், சாள்ஸ், தவநேசன், அபிராமி
Tam. - S.P.சாந்தன், முருகதாஸ்
Soci. - ஐங்கரன், குகதாஸ்
Eng. - ரவி, மகாதேவன், இரமேஸ், இரட்ணம்
Hin. - ராஜி,மோதிலால்
Chi. - அஜந்தா
Com. - பாஸ்கரன்
Agi. - பரந்தாமன்
Art. - தனசீலன்
Muc. - ரசிதா
Dan. - ஞானம்
(தமிழ் இலக்கியம், புவியியல் அறிவித்தி. உடற்கல்வி நடைபெறுகின்றன.)
பொது அறிவு - தவரட்ணம்
புலமைப்பரிசில் - கைலநாதன்
★வலி.மேற்கில் தன்னிகரில்லா நிறுவனம் என மாணவர்களின் அபிப்பிராயம் பெற்ற நிறுவனம்.
★கடமை,கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
★கல்வி உலகின் முன்னோடி
SUBRA
(82380)

தரம் 5
புலமைப்பரிசில் வகுப்பு
சனி - ஞாயிறு
நடைபெறுகின்றன.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
BARATHY
சித்தன்கேணி. (82346)

புதிய வீடியோ
போஸ்ரர்கள்
விற்பனைக்கு!
ஜோதி வீடியோ
மானிப்பாய். (C/14614)

திருகோணமலை
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
மஹா கும்பாபிஷேகம்
அம்பிகை அடியார்களே!





அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கு ஸ்ப்ததள இராஜகோபுரம், திரிதள மூலஸ்தான கர்ப்பக்கிரகம் மற்றும் திருப்பணிகள் ஆகமஸ்திரோக்தமாக நிறைவேறிவரும் தை மாதம் 25 ஆம் நாள் (07.02.2001) புதன்கிழமை தைப்பூசத் தினத்தன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.
இத்திருப்பணிக்கு நிதி தந்து உதவி, அம்பாள் கடாட்சம் பெற விரும்பும் பக்தர்கள் இலங்கை வங்கியின் திருகோணமலை பஸார் கிளையில், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பெயரில் உள்ள C 3470 இலக்க நடைமுறைக் கணக்கில் நிதியை வரவிலிட முடியும்.
மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணம் 'உதயன்' பணிமனையில் திரு.ந.வித்தியாதரனுடன் தொடர்பு கொள்ளலாம்.
வேதாகமமாமணி
பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்
ஆதீனகர்த்தா.
திருகோணமலை
அருள்மிகு
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தானம். (C/14618)

இன்னும்
4
நாள்களில்
A/L 2003
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்:- 07-01-2001 ஞாயிறு
பொருளியற் கல்லூரி
இரு இடங்களில்
யாழ்ப்பாணம்- 9.00 a.m. இணுவில் - 8.00 a.m. (82340)

A/L 2003 (கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:
ஜனவரி 06
காலை 8.00 மணி
ஆசிரியர் குழு:
கணக்கீடு - D.SAM
வணிகக்கல்வி - பசில்
பொருளியல் - இராஜேஸ்வரன்
பொதுவினா - வழமையான ஆசிரியர்
தமிழ் - மீரா
இந்துநாகரிகம் - ஜோதீஸ்வரன்
அளவையியல் - மோகன்
கிறிஸ்தவம் - மல்லிகா
நாடகம் - சந்திரன்
புவியியல் - இக்னேசியஸ்
இந்துசமயம் - சுரேன்
ஆங்கிலம் - ஜெயக்குமார்
DMI யாழ்நகர். (81300)

முகாமைத்துவ மாணவர் மன்றமும் IBMS கணனி நிறுவனமும்
இணைந்து நடாத்தும்





மாபெரும் கணனிக் கண்காட்சி - 2001
யாழ் நகரில் முதன் முறையாக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றமும்,
IBMS கணனி நிறுவனமும் இணைந்து மாபெரும் கணனிக் கண்காட்சியை வழங்குவுள்ளது
நவீன கணனித்தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி, பல்வேறு அம்சங்களில் ........
☞ Voice Recognition
☞ Internet & E-Mail
☞ New Games
☞ CD Writers
☞ Multimedias
☞ TV Card
☞ Net work
☞ Digital Video Creator





அத்துடன் பல்வேறுபட்ட துறைசார் நிகழ்ச்சித்திட்டங்கள்,மற்றும் கணனியை கையாள்வது எவ்வாறு ?
கணனி பற்றி நீங்கள் அறிய விரும்பும் பயனுள்ள பல்வேறு தகவல்கள்,பாடசாலை மாணவர்களுக்கு பயன்படக்கூடிய விடயங்களுடன் மற்றும் பல்வேறு பயனுள்ள தகவல்களுடன் ............
இக் கண்காட்சியை காண்பதன் மூலம் Millennium First ல் நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்து கொள்ளுங்கள்.





காணத்தவறாதீர்கள்





IBMS No.701,K.K.S Road, Jaffna.
முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்/பல்கலைக்கழகம்.

எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!
விக்னா கல்வி நிறுவனம்
A/L 2003


| | | |
|---|---|---|
| கணக்கீடு<br>திரு. பாலவாசன் | பொருளியல்<br>திரு. விக்கி | வணிகக்கல்வி<br>திரு. நந்தீஸ் |
| அளவையியல்<br>திரு. சயந்தன் | தமிழ்<br>திரு. லிங்கம் | இந்துநாகரிகம்<br>திரு. பத்மராஜா |
| வரலாறு<br>திரு. அன்ரன் | நாடகமும் அரங்கியலும்<br>திரு. மதி | புவியியல்<br>திரு. ஐங்கரன் |
| கிறிஸ்தவம்<br>திரு. வசந்தன் | விக்னா கல்வி நிறுவனம் | பொது அறிவு<br>திரு. அன்ரன் |


ஆரம்பம்:
06.01.2001 -> 9.00 மணி
(82423)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.